நூலகம்
இலக்கியம்

ஆசிரியர்: நூலகஞானி - டாக்டர் பா. பெருமாள்
M.A., M.Lib.Sc., Ph.D.,

105 வது பிறந்தநாள். அமரர் டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்,
9 - 8 - 1892 — 27 - 9 - 1972
திருமதி சாரதா ரங்கநாதனின் கண்ணீர் கடிதம் - 10 வைர வரிகள்

(அடுத்த பக்கம் காண்க)

நூலகம் : 1 ஆகஸ்டு, 1996 இலக்கியம் : 1

கண்ணீர் கடிதம்—10 வைர வரிகள்

☐ பிரியமுள்ள சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் சமூகத்திற்கு ஆசீர்வாதம். சில நிமிடங்கள்...சிந்தனைக்கு... செயலுக்கு...

☐ 1957 - லேயே லட்ச ரூபாயை நூலக ஆராய்ச்சிக்குக் கொடுத்தேன் இன்றுவரை, தமிழில்...நடந்த ஆராய்ச்சிப் பணிகளின் பட்டியலை வெளியிட்டு உதவவும்.

☐ திருமதி சாரதா ரங்கநாதன் நூலக தகவல் அறிவியல் பேராசிரியர் பதவியை ஏற்படுத்தினார்கள். நன்றி.

☐ அந்தப்பதவி நாற்காலியை அலங்கரித்தவர்கள்..................

* கன்னடத்துக்காரர் — அமரர் பேராசிரியர் டாக்டர் D. B. கிருஷ்ணாராவ்

* ஆந்திராக்காரர் — அமரர் பேராசிரியர் P. கங்காதரராவ் நூலகக் கல்வியை போதித்து புகழ்பெற்றனர்

* இன்று, கன்னடத்துக்காரரான பேராசிரியர் டாக்டர் K. S. ராகவன் U. G. C. பேராசிரியராய் அமர்ந்துவிட்டார். நூலகத்துறைத் தலைவர் (......1996......)

☐ கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக, இப்பதவி நாற்காலி காலியாக வேகிடக்கிறது ஏன்? ஏன்??

* யாருக்கும் அக்கரையோ, வெட்கமோ இருப்பதாக புலப்படவில்லை !

☐ உலகம் புகழும் கோலன் பகுப்புமுறை-என் கணவரின் சாதனை. வேதனையுடன் எழுதுகிறேன்-நூலகத்துறை நூலகத்தில் DDC பகுப்புமுறை பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சுதேசி இயக்கம் உருவாக நேரம்-கால கட்டாயமாகும். Be Indian-Buy Indian- காற்றில் மிதக்கும் வார்த்தைகள் தானா?

☐ லட்ச ரூபாய் பேங்கில் வட்டிக்கு வட்டி குட்டி போடும் ! தமிழ் நூலக ஆராய்ச்சாவது? மண்ணாவது?

☐ தமிழ் நூலக உணர்வு, தமிழ் நூலக இயக்கம், தமிழ் நூலக இலக்கியவளர்ச்சிக்கு இத்துறை தலைவர்கள் (பிற மொழியினராதலின்) உதவிடவில்லை என்பதே உண்மையாகும்.

☐ உங்களுக்கு புண்ணியமாகப் போகட்டும். இதுபற்றி தமிழ் நூலக - தகவல் விஞ்ஞானிகளுடன் கலந்துரையாட வேண்டுகிறேன்.

☐ திருமதி சாரதா ரங்கநாதன் – வைகுந்தம், சொர்க்கவாசல்.

"கனிந்த வாழ்வு" வாழும் பதிப்பாளர்

"பழனியப்பா பிரதர்ஸ்" எல்.ஏம். பழனியப்ப செட்டியார்

-துளசி



எஸ். எம். பழனியப்ப செட்டியார், சென்னை - 14.

பதிப்பகத்துறையில் ஒரு முக்கிய பெயர் 'பழனியப்பா பிரதர்ஸ்' ஐம்ப தாண்டுகளுக்கும் மேல் இத்துறையில் இருப்பதோடு, வேறு பல துறைகளிலும் தன்னை விரிவு படுத்திக் கொண்டிருக் கிறது. இதற்குக் காரணம், எஸ்.ஏம். பழனியப்ப செட்டியார்.

எழுபதுக்கும் மேல் வயது. சுத்தமான உடை. ரேபான் கண்ணாடி. மின்னும் பிரேஸ்லெட். எல்லாம் சுய உழைப்பின் பலன். அவரியடம் பேசியதிலிருந்து:

உங்கள் இளமைப் பருவம் பற்றி கொஞ்சம் சொல்லுங் களேன்.

நான் ராயவரத்தில் பிறந்தேன். அங்கேதான் படித்தேன். என்னோடு அழ.வள்ளியப்பா படித்தார். என் னோட வாழ்க்கையில் நான் ஆரம்பத் தில் இருந்ததற்கும் இப்போது இருப்ப தற்கும் சம்பந்தமில்லை. நான் யாரோ டும் பழக மாட்டேன். சின்ன பெட்டியில் தேன்குழல் போட்டுத் தருவார்கள். அதை தின்று கொண்டே உட்கார்ந்தி ருப்பேன். ஒரு மூன்று பேரோடு கூட பழகியதில்லை. அது அப்போ இப்போ பிளேனில் போனால்கூட பக்கத்தில் இருப்பவரிடம் பேசி சினேகம் பிடித்துக் கொள்வேன்.

நான் எஸ்.எஸ்.எல்.சி.தான் படித்தேன்.

எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு என்ன செய்தீர்கள் ?

படித்துக் கொண்டிருந்தேன். படித்துக் கொண்டிருந்தபோதே எப்.எம்.குட்ஸ் கம்பெனிக்கு ஏஜெண் டாக இருந்தேன். கோர்ஸ் இங்க் கம்பெனிக்கு ஏஜெண்டாக இருந்தேன். அதுக்கு அப்புறம் புத்தகக் கடை ஆரம்பித்துவிட்டேன். நான் படித்

கண்ணீர் கடிதம் —10 வைர வரிகள்

☐ பிரியமுள்ள சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் சமூகத்திற்கு ஆசீர்வாதம். சில நிமிடங்கள்...சிந்தனைக்கு... செயலுக்கு...

☐ 1957 - லேயே லட்ச ரூபாயை நூலக ஆராய்ச்சிக்குக் கொடுத்தேன் இன்றுவரை, தமிழில்...நடந்த ஆராய்ச்சிப் பணிகளின் பட்டியலை வெளியிட்டு உதவவும்.

☐ திருமதி சாரதா ரங்கநாதன் நூலக தகவல் அறிவியல் பேராசிரியர் பதவியை ஏற்படுத்தினார்கள். நன்றி.

☐ அந்தப்பதவி நாற்காலியை அலங்கரித்தவர்கள்.................

* கன்னடத்துக்காரர் — அமரர் பேராசிரியர் டாக்டர் D. B. கிருஷ்ணாராவ்

* ஆந்திராக்காரர் — அமரர் பேராசிரியர் P. கங்காதரராவ் நூலகக் கல்வியை போதித்து புகழ்பெற்றனர்

* இன்று, கன்னடத்துக்காரரான பேராசிரியர் டாக்டர் K. S. ராகவன் U. G. C. பேராசிரியராய் அமர்ந்துவிட்டார். நூலகத்துறைத் தலைவர் (......1996......)

☐ கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக, இப்பதவி நாற்காலி காலியாக வேகிடக்கிறது ஏன்? ஏன்??

* யாருக்கும் அக்கரையோ, வெட்கமோ இருப்பதாக புலப்படவில்லை !

☐ உலகம் புகழும் கோலன் பகுப்புமுறை-என் கணவரின் சாதனை. வேதனையுடன் எழுதுகிறேன்-நூலகத்துறை நூலகத்தில் DDC பகுப்புமுறை பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் தெரிகிறது. சுதேசி இயக்கம் உருவாக நேரம்-கால கட்டாயமாகும். Be Indian-Buy Indian- காற்றில் மிதக்கும் வார்த்தைகள் தானா?

☐ லட்ச ரூபாய் பேங்கில் வட்டிக்கு வட்டி குட்டி போடும் ! தமிழ் நூலக ஆராய்ச்சாவது? மண்ணாவது?

☐ தமிழ் நூலக உணர்வு, தமிழ் நூலக இயக்கம், தமிழ் நூலக இலக்கியவளர்ச்சிக்கு இத்துறை தலைவர்கள் (பிற மொழியினராதலின்) உதவிடவில்லை என்பதே உண்மையாகும்.

☐ உங்களுக்கு புண்ணியமாகப் போகட்டும். இதுபற்றி தமிழ் நூலக - தகவல் விஞ்ஞானிகளுடன் கலந்துரையாட வேண்டுகிறேன்.

☐ திருமதி சாரதா ரங்கநாதன் – வைகுந்தம், சொர்க்கவாசல்.

"கனிந்த வாழ்வு" வாழும் பதிப்பாளர்

"பழனியப்பா பிரதர்ஸ்" எஸ்.எம். பழனியப்ப செட்டியார்

-துளசி



எஸ். எம். பழனியப்ப செட்டியார், சென்னை - 14.

பதிப்பகத்துறையில் ஒரு முக்கிய பெயர் 'பழனியப்பா பிரதர்ஸ்' ஐம்ப தாண்டுகளுக்கும் மேல் இத்துறையில் இருப்பதோடு, வேறு பல துறைகளிலும் தன்னை விரிவு படுத்திக் கொண்டிருக் கிறது. இதற்குக் காரணம், எஸ்.எம். பழனியப்ப செட்டியார்.

எழுபதுக்கும் மேல் வயது. சுத்தமான உடை. ரேபான் கண்ணாடி. மின்னும் பிரேஸ்லெட். எல்லாம் சுய உழைப்பின் பலன். அவரியடம் பேசியதிலிருந்து:

உங்கள் இளமைப் பருவம் பற்றி கொஞ்சம் சொல்லுங் களேன்.

நான் ராயவரத்தில் பிறந்தேன். அங்கேதான் படித்தேன். என்னோடு அழ.வள்ளியப்பா படித்தார். என் னோட வாழ்க்கையில் நான் ஆரம்பத் தில் இருந்ததற்கும் இப்போது இருப்ப தற்கும் சம்பந்தமில்லை. நான் யாரோ டும் பழக மாட்டேன். சின்ன பெட்டியில் தேன்குழல் போட்டுத் தருவார்கள். அதை தின்று கொண்டே உட்கார்ந்தி ருப்பேன். ஒரு மூன்று பேரோடு கூட பழகியதில்லை. அது அப்போ இப்போ பிளேனில் போனால்கூட பக்கத்தில் இருப்பவரிடம் பேசி சினேகம் பிடித்துக் கொள்வேன்.

நான் எஸ்.எஸ்.எல்.சி.தான் படித்தேன்.

எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு என்ன செய்தீர்கள் ?

படித்துக் கொண்டிருந்தேன். படித்துக் கொண்டிருந்தபோதே எப்.எம்.குட்ஸ் கம்பெனிக்கு ஏஜெண் டாக இருந்தேன். கோர்ஸ் இங்க் கம்பெனிக்கு ஏஜெண்டாக இருந்தேன். அதுக்கு அப்புறம் புத்தகக் கடை ஆரம்பித்துவிட்டேன். நான் படித்

விட்டு வேலைக்குப் போகவில்லை. என் அப்பா இந்தியன் பேங்கல சேரச் சொன்னார். என்னடா பிசினஸ் பண்ற, போடான்னுட்டார். எனக்கு அசட்டு தைரியம். ஆரம்பத்திலிருந்தே ரிஸ்க் எடுக்கும் பழக்கம். என் கையில் ஒன்று மில்லை. பிழைக்க வழியில்லை. ஆனாலும் எதிர்ப்புதான். இன்டிபெண் டென்டா வாழணும்னு எண்ணம்.

உங்களுக்கு குடும்ப தொழில் என்று ஏதாவது உண்டா?

எதுவும் இல்லை. என் தகப்பனார் பர்மாவில் மேனேஜராக இருந்தார். கொஞ்சம் நகையும், வீடும் வைத்து விட்டுப் போனார். கடவுள் செயலால் இதையெல்லாம் நான் வளர்த்தேன்.

பதிப்புத் துறைக்கு வந்தது எப்போது?

1941 இல் பழனியப்பா பிரதர்ஸ் ஆரம்பித்தேன். முதலில் காலேஜ் புக்ஸ்தான் போட்டுக் கொண்டிருந் தேன். ஸ்டேஷனரியும் விற்றுக் கொண் டிருந்தேன். அப்போது சக்தி பதிப்பகம் வை. கோவிந்தன் இருந்தார். அவர்தான் என்னை ஊக்கப்படுத்தியவர். அப்புறம் 'சமைக்கலாமே' போன்ற புத்தகங் களும், நடேச முதலியாருடைய காலேஜ் புத்தகங்களும் போட்டேன்.

ஐயம்பெருமாள் கோனாரைச் சந்தித்தது எப்படி?

நான் பண்டிதமணி கதிரேசன் ரெட்டியாரைப் பார்க்கப் போனேன். அங்கே கோனார் இருந்தார். கதிரேசன் செட்டியார்தான் கேட்டார். 'இவனுக்கு எழுதிக் குடுங்களேன்' என்றார். முதன் முதலில் ஆறாவது வகுப்பு புத்தகம் கொடுத்தார். அன்றிலிருந்து இன்று பெயர், காலேஜ் போட்டோம். பின்னால் வெறும் காலேஜ் மட்டும் போட்டோம். அவருக்கு கிடைத்த புகழ்,பெருமை எல்லாம் ரொம்ப உசத்தி. அதனால், அவர் போன பின்னும், அந்த நோட்ஸ்களுக் கெல்லாம் கோனார் நோட்ஸ்ன்னே பெயர் வைத்து விட்டேன். வேறு பலரும் எழுதிக் கொடுத்தாலும் அது கோனார் நோட்ஸ் என்றே வரும்.

கோனார் நோட்ஸுக்கு அவ்வளவு புகழ் வரக் காரணமென்ன?

எளிமைதான். பசங்களுக்குச் சுலபமா புரியும். அங்கே விசா பிரச்னை வந்தது. ஒருத்தரைப் போய் பார்க்கச் சொன்னாங்க. போனேன். இந்தியா வான்னார். ஆமான்னேன் சௌத் இந்தியாவான்னார். ஆமா. தமிழ்நாடா! ஆமா. என்ன பேருன்னார். பழனி யப்பா பிரதர்ஸ், பழனியப்ப செட்டியார் னேன். உடனே டபக்குன்னு எழுந் துட்டார். கோனார் நோட்ஸ் உங்களுது தானேன்னு' கேட்டார். ஆமான்னேன். அவருக்கு ஒரே ஆச்சரியம். அவர் ஒரு தமிழர். 79 பேர் படித்த கிளாஸ்ல சரியான வாத்தியார் இல்லியாம். கோனார் படித்துதான் பாஸானாராம். அதேபோல, IDPL லோன் வாங்க போனா, அங்க ஒரு கோனார் நோட்ஸ் படிச்சவரு. எங்க போனாலும் எனக்கு கோனார் ஐயா ரொம்ப உதவியா இருக்காரு.

நீங்கள் நிறைய இலக்கியப் புத்தகங்களும் வெளியிட்டி ருகிறீர்கள். அவையெல்லாம் எப்படி விற்பனை?

திருவாசகம், திருமந்திரம் எல்லாம் போட்டேன். நல்லா போச்சு.

நாவல், மொழிபெயர்ப்புன்னும் போட்டேன். அதுவும் நல்லா போச்சு.

'திருமண முறைகள்' போன்ற நல்ல புத்தகங்கள் பழனியப்பா பிரதர்ஸில் இருந்து வெளியாகி இருக்கிறது..அதை யெல்லாம் எப்படி செலக்ட் செய்தீர்கள் ?

நான் ஒண்ணும் செய்யல. Author கொண்டு வந்து கொடுத்தார்கள். வெளியிட்டோம்.

அன்றைக்கிருந்த பதிப்பகத் துறைக்கும் ,இன்றைக்கிருப்பதற்கும் ஏதாவது வித்தியாசம் தென்படுகிறதா?

அந்த காலத்துல நிறைய பேர் கமிட்டடா புத்தகம் போட்டாங்க. இலக்கியத்துக்கு உண்மையா சேவை செஞ்சாங்க. ஆயிரம் காப்பி போட்டாலும், எல்லா கடையிலும் வித்துது. ஆனா இன்னிக்கு, பணம் சம்பாதிப்பதே குறிக்கோள்னு ஆகிப்போச்சு. இதை நான் தப்பு சொல்ல மாட்டேன்.

ஆனா வளர்சிசயில்லாம போயிட்டுது. இன்னிக்கு ஆயிரம் காப்பி போடறாங்க. 500 - 600 காப்பி லைப்ரரிக்குக் குடுத்துடறாங்க. மிச்சம் வித்தா, வரது லாபம். இப்படியே பொழப்பு நடத்தறாங்க. ஒரு ரிஸ்க் எடுத்து, குவாலிட்டி புக்ஸ் யாரும் போடறதில்ல. அதுக்காக நாங்களும் ஒண்ணும் பெரிசா செஞ்சுட்டதா சொல்ல மாட்டேன்.

பிற்காலத்தில் நீங்கள் குழந்தைகள் பதிப்பகமாகவே மாறக் காரணமென்ன?

ஏதாவது புதுசா செய்துகிட்டே இருக்கணும்னு நெனைப்பேன். இலக்கிய புத்தகம் போட்டேன். டிரெண்ட் மாறிடிச்சு. குழந்தைகள் புத்தகங்களுக்கு நல்ல டிமாண்ட் இருந்திச்சு. அதிலேயே நெறைய செய்ய ஆரம்பிச்சோம்.

அதான் சொல்றேனே, நான் ஒண்ணும் பெரிசா செய்யல. இப்ப வானதி செட்டியார் இருக்காரு. அவரு சேவை செய்யறாருன்னா, ஒத்துப்பேன். அவரு கமிட்டட் பப்ளிஷர். நான் பிசினஸ் மேன்.

அவர மாதிரியெல்லாம் என்னால வாழமுடியாது. அவர் போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்துன்னு நிறைவா இருக்காரு. எனக்கு அப்படியெல்லாம் முடியாது. பெரிசா செய்யணும். வாழணும்.

புத்தகம் போட பேப்பர் போன்ற பொருள்கள் விலையேறினாலும், உங்கள் புத்தகங்களின் விலை குறைவாகவே இருக்கிறதே ?

பிரைஸ்ட் புக்ஸ்னா 1/3 மார்ஜின், 1/3 காஸ்ட், மிச்சம் ஆசிரியருக்கு. 10 சதவிகிதம் ராய்லடி. அப்புறம் டிஸ்கௌன்ட். இதுதான் சரியான முறை. புத்தக கம்பெனியெல்லாம் மூடறதுக்குக் காரணம், மார்ஜின்ன குறைச்சுக்கறதுதான். 30 சதவிகிதம் புரொடக்ஷன், 30 சதவிகிதம் டிஸ்கௌண்ட், 30 சதவிகிதம் மார்ஜின் இருக்கணும்.

ஆனாலும், தொடர்ந்து பேப்பர் எல்லாம் விலை யேறுகிறதே ?

அதுக்குத்தான் விலலயேத்தி விடுகிறோமே. முன்ன 5 ரூபாய் நோட்ஸ். இந்த வருஷம் 35 ரூபாய். அப்படி விலை வைக்காமல்

போனதால்தான், கம்பெனி மோசமாகப் போய்விட்டது. இப்போது இந்தியாவில் வாங்கும் சக்தி கூடியிருக்கிறது. நல்ல டிரஸ் வாங்கறாங்க. எல்லாரும் பிரிப்கேஸ் வச்சுக்க ஆரம்பிச்சுட்டாங்க. அதனால, அதுக்கு ஏத்தாப்பல விலைய கூட்டிக்க வேண்டியதுதான்.

நீங்கள் வெளியிட்ட புத்தகங்களில் எது அதிகம் விற்றது?

திருமந்திரம் நன்றாகப் போச்சு. 15,000 லிருந்து 20,000 காப்பிகள் விற்றது.

நோட்ஸ் எல்லாம் எவ்வளவு விற்கிறது ?

கோனார் நோட்ஸ் லட்சங்களில் விற்கிறது. 6ஆம் வகுப்பு 6 லட்சம், 7ம் வகுப்பு 6 லட்சம் எதிர்பார்க்கிறோம். எதுவும் ஆறு இலக்கங்கள். அதில் நான் சௌகரியமாகவே இருக்கிறேன். நல்ல பிசினஸ்.

நீங்கள் விருப்பப்பட்டு போட்டு, விற்காமல் போன புத்தகங்கள் உண்டா ?

இல்லை.... அப்படியெதுவும் இல்லை. பின்னாடியாவது வித்திடும். பத்துவருஷம் கழிச்சாவது வித்துடும். எதுவும் வேஸ்டில்ல. ஆனா ஒண்ணு, நாம வட்டி குடுக்க ரெடியாயிருக்கணும். வட்டிய கணக்கு பண்ணா பிசினஸ் பண்ண முடியாது.

என்னோட கொள்கையே, "கடன் நிறைய வாங்கோனும். அதைத் திருப்பி கொடுக்கணும்". அதுக்குள்ள சொத்து விலை ஏறிப் போயிடும்.

நீங்கள் ஒரு புத்தகம் போடுவதற்கு எப்படி முடிவெடுப்பீர்கள் ?

நான் ஒருத்தர்கிட்ட காண்பிப்பேன். ரெண்டு நாள் கழிச்சு இன்னொருத்தர் கிட்டேயும் காட்டுவேன். அவரும் நல்லாயிருக்குன்னா போடுவேன். நானா எதையும் டிசைட் பண்ணதில்ல.

உங்கள் புத்தகங்களை எப்படி விற்கிறீர்கள் ?

டிரேடர்ஸ்க்கு அனுப்பி விடுவோம். இன்னும் நிறைய விற்க முடியும். யாரும் இன்னும் 40 சதவிகித மார்க்கெட்டைக் கூட தொட முடியவில்லை. தொடர்ந்து விற்க வேண்டும் என்று தான் முயற்சிக்கிறேன்.

எபபோது நீங்கள் பிற தொழில்களில் கவனம் செலுத்த ஆரம்பித்தீர்கள் ?

பீரியட் சொல்ல முடியாது. கண்ணம்மை பில்டிங் ஆரம்பிச்சேன். முதன் முதலில் நான்தான் (முறுக்கிய கம்பி) உபயோகப் படுத்தியவன். தைரியம். ஐயாயிரம் ரூபாய்கூட டெபாசிட் இல்லை. பில்டிங் ஆரம்பிச்சவுடனே, கன்ஸ்ட்ரக்ஷன் ஆரம்பிச்சேன். சரியான நிர்வாகம் இல்லாததால், நிறைய இழப்பு. கன்ஸ்ட்ரக்ஷனை நிறுத்தி விட்டேன். இப்போது மறுபடியும் ஆரம்பித்திருக்கிறேன். ஏன்னா, நான் ஒல்ல விலையுயர்ந்த பாடத்தைக் கற்றிருக்கிறேன்.

அதேபோல, ஏசியன் பியரிங் கம்பெனியில், இருபத்தி இரண்டு கோடியை பயன்படுத்தி இப்போது லாபகரமாக நடக்கிறது. எந்த கம்பெனியாலும் லாபமில்லையென்றாலும் ஒன்றுமில்லை.

எனக்கு 'கூழானாலும் குளித்துக் குடி', 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு',

'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' போன்ற பழமொழிகள் பிடிக்காதவை. அதனாலதான் தமிழர்கள் வளரவே இல்லை.

நார்த் இன்டியன்ஸ் வளர்ந்துகிட்டே போகிறார்கள். டாட்டாவும், பிர்லாவும் புதுசு புதுசாய் கம்பெனி ஆரம்பிக்கிறார்கள். என்னுடைய எண்ணம், இன்னும் வளர்ந்து கொண்டே போக வேண்டும். மூளைக்கு ஓய்வு கொடுக்கக் கூடாது. ஓய்வு கொடுத்தால், அது துருப்பிடித்து விடும்.

உங்களுக்கு கட்டிடக் கலையில் ஏதும் அனுபவமுண்டா? கன்னம்மை பில்டிங் கட்டியிருக்கிறீர்களே ?

ஒண்ணும் கிடையாது. நான் வெறும் எஸ்.எஸ்.எல்.சி. தான் படிச்சிருக்கேன். இப்போ ஏசியன் பியரிங் கம்பெனி ஆரம்பிச்சிருக்கேன். ஒரு புது டெக்னாலஜி அறிமுகப்படுத்தியிருக்கேன். போர்ஜிங் மூலமாக செய்வது. எனக்கு ஒண்ணும் தெரியாது. காமன்சென்ஸும், கடவுளும் எனக்கு உதவுது. எனக்கு கன்ஸ்ரெக்ஷன் பத்தி ஒண்ணும் தெரியாது.

ஆனா, எங்க செட்டியார்களுக்கு பேங்கிங் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் இயற்கையாக வர விஷயம். அதை வைத்துக் கொண்டு செய்தேன். சொன்னால் நம்ப மாட்டீர்கள். கன்னம்மை பில்டிங் கட்டியது நானும் ஒரு சூப்பர்வைசர் முத்தையா என்பவரும்தான். நோ என்ஜினியர்ஸ், ஆர்க்கிடெக்ட்ஸ். இதுலதான் நான் டார்ஸ்டீலை முதன் முதலில் பயன்படுத்தினேன். பின்னாடி டார்ஸ்டீல் அறிவை வைத்துக் கொண்டு கான்ட்ராக்ட் எடுத்தேன். ஆனால், அதை சரியாக நிர்வகிக்காமல் போனதால், பெரும் இழப்பு. இப்ப திரும்ப கொஞ்சம் கத்துகிட்டேன். அதனால் சாந்தோமில் புதிதாக பிளாட் கட்டுகிறேன். இனிமேல், முழு மூச்சில் கன்ஸ்ட்ரக்ஷன் செய்யப் போகிறேன்.

நீங்கள் ஒவ்வொரு துறையிலும் அடிபட்டுதான் முன்னுக்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் வெற்றிக்கு இது தான் காரணம் என்று சொல்லலாமா ?

நான் 'ஸ்டெப்ஸ் டு இங்க்லீஷ்' போட்டேன். அது மூன்று முறையும் தோல்வி. யாருமே பாடமாக வைக்கவில்லை. பின்னர் பல பள்ளிகளில் வைத்தார்கள். ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பிரதிகள் விற்பனையாயிற்று. அதனால், தோல்வியென்றவுடன் துவண்டுவிடக்கூடாது. எப்படி சாதிக்க வேண்டும் என்று யோசிக்க வேண்டும். அப்புறம், மூளைக்கு ஓய்வு கொடுக்கக் கூடாது. எப்போதும் சுறுசுறுப்பாயிருக்க வேண்டும். என்கு தூங்கும் நேரம் குறைவு. நாலு மணி நேரம்தான் தூங்குகிறேன். காலை மூன்றரை மணிக்கு எழுந்திருக்கிறேன். காலை நடை எல்லாவற்றையும் முடித்து விட்டு, எட்டு மணிக்கு நான் ரெடி. அதனால், எப்போது நாம் அயராமல் உழைக்கிறோமோ, வெற்றி அப்போது நிச்சயம்.

உங்களது ஆரம்பகால வாழ்வுக்கும், இன்றைக்கிருப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. இந்த மாற்றத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?

நான் எளிமையாக போயிட்டிருக்கேன். எவ்வளவுக்கெவ்வளவு சம்பாதிக்கிறேனோ, அவ்வளவுக்கவ்வளவு எளிமையா ஆயிட்டிருக்கேன். பணிஞ்சி போயிட்டேன். யாரையும்

பகைத்துக் கொள்வதில்லை. எனக்கு படாடோபம் இல்லை. என் பலமும், பலவீனமும் அதுதான். ஆனா, என் கிட்ட பழகியவர்களுக்கு சின்சியாரிட்டி தெரியும். எல்லோரையும் மதிக்கணும். அப்பதான் நல்லா வாழமுடியும். ஈகோலிஸம் இருந்தா, வாழ முடியாது. நான்,யார் சொன்னாலும் கேட்பேன். வயது வித்தியாசம் பார்க்க மாட்டேன்.

நான் ஜப்பான் போயிருந்தேன். அவங்க எதையும் சாத்ாரணமா எடுத்துக் கொள்வதில்லை. நாலு பேர் உட்கார்ந்து முடிவெடுத்து, நோட் செடுத்துச் செய்யறாங்க. அதுமாதிரி, நாமும் நாலு பேரை கலந்து ஆலோசித்து எதையும் செய்ய வேண்டும். நான் அப்படித்தான் செய்யறேன்.

பதிப்புத் துறையிலேயிருந்து வேறு துறைகளுக்கும் போயிருக்கிறீர்கள். இனி எந்தெந்தத் துறையில் போக உத்தேசித்திருக்கிறீர்கள் ?

போர்டு கம்பெனி வருது. அதுக்கு போல்ட், னெட் போடலாம்னு பாக்கறோம். அப்புறம் டிஷ்யூ கல்சர் பண்றாங்க. அதையும் பண்ணாம்னு பாக்கறோம். அதுக்கப்புறம் கெமிகல் என்ஜினியரிங் செய்யணும். டெக்ஸ் டெய்ஸும் செய்யலாம்னு இருக்கோம். நெறைய செய்யணும்னு ஆசை, மனுஷனுக்கு எல்லையில்லை. குறிக்கோளோடு இருக்கணும். ஆனால் பொறாமை கூடாது.

நீங்கள் உங்களுடைய கொள்கையாய், 'நிறைய கடன் வாங்க வேண்டும், செய்ய வேண்டும்' என்கிறீர்கள். அதற்கு நிறையபேர் பயப்படலாமில்லையா ?

பயப்படக்கூடாது. ஆனால் நாணயம் வேண்டும். இன்டெக்ரிட்டி வேண்டும். கடன் வாங்க நாமம் போடக் கூடாது. இப்போது நான் நாற்பது லட்சம் கடன் வாங்கினேன். நோட்ஸ் போட. அடுத்த வருடம் ஒன்றரை கோடி வாங்க இருக்கிறேன். வர லாபத்தை முதலீடு செய்ய வேண்டும். கடனும் வாங்கணும். லாபம் சம்பாதித்து திருப்பியும் இன்வெஸ்ட் பண்ணணும். அப்படியே பெருக்கிக் கொள்ளணும்.

இவ்வளவு நிறைய அனுபவம் பெற்றுள்ள நீங்கள், புதிதாக வரும் தொழில் முனைவோருக்கு என்ன சொல்கிறீர்கள் ?

இரவும் பகலும் உழையுங்கள். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மனது' என்ற பழமொழியை பின்பற்றக் கூடாது. இன்னும் என்ன பண்ணோணும். கஷ்டப்படணும். உழைக்கணும். கடன் வாங்கினால் ஏமாத்தக் கூடாது. கடன் திருப்பிக் கொடுக்கணும். அப்பத்தான் நாம நல்லா முன்னுக்கு வரலாம். ஓய்வு என்பது கூடாது.

பழனியப்பா பிரதர்ஸில் வருங்காலத்தில் என்ன வெளியிட இருக்கிறீர்கள ?

பழனியப்பா இங்கிலீஷ் புத்தகம் போடப் போகிறோம். டெக்னிகல் புக்ஸ் போடப் போகிறோம். இப்ப இலக்கியப் புத்தகங்கள் நிறைய போடல. இனிமே நிறைய இலக்கியப் புத்தகங்கள் போடப் போகிறோம்.

நூலக மொழி

நன்றி : தமிழ்நாடு அரசு - தமிழ் வளர்ச்சித் துறையால் அறுதியிடப் பெற்றது. பொது நூலகத்துறை - சிறப்புச் சொல் துணையகராதி 1984. (Supplementary Glossary of special Terms): Public Library Department.)

தமிழாக்கம் : பொது நூலகத்துறை, சென்னை - 2.

கூர்ந்தாய்வாளர் : திரு. த. பெரியாண்டவன் எம்.ஏ., (உதவி) இயக்குநர் (மொழி பெயர்ப்பு) தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை - 108.

அமரர் திரு. திருமலை முத்துசாமி, இதுபோன்று ஒரு பட்டியலை (1028 சொற்கள் அடங்கியது) வெளியிட்டுள்ளார்.

திரு. வே. தில்லை நாயகம், முன்னாள் பொது நூலக இயக்குநர் (ஓய்வு) மற்றுமொரு பட்டியலை படைத்துள்ளார்.

இவற்றை எல்லாம் ஒப்பு நோக்கி, புழக்கத்தில் பயன்படக்கூடிய சொல்லை உருவாக்குவதே இம்முயற்சியின் நோக்கமாகும்.

வாசகர்களே - அறிஞர்களே - எழுதுங்கள் - உங்கள் கருத்துக்களை.

FIRST ANNIVERSARY

Dr. P.A. MOHANRAJAN

M.A., B.Lib.Sc., Ph.D.
Retd. Librarian, University of Madras
Documentation Officer,
Raj Bhavan, Madras.
Left us on : 18-6-1995
Sons : Bhojharaj, Nambiraj

நூலகத் தமிழ் வளர்க்க ......

நூலக மொழி சிறப்புச்
சொல் துணையகராதி 1984

Abstract	:	சுருக்கக் குறிப்பு
Accession	:	சேர்க்கை
Accession Number	:	சேர்க்கை எண்
Accession Register	:	சேர்க்கைப் பதிவேடு
Adaptation	:	தழுவல்
Adaptor	:	தழுவி எழுதியவர்
Added entry	:	கூட்டிய பதிவு, துணைப் பதிவு
Additional	:	கூடுதல்
Administration	:	ஆட்சி
Agriculture	:	வேளாண்மை
Alphabetical catalogue	:	அகர வரிசைப் பட்டியல்
Alphabetical sequence	:	அகர வரிசை முறை
Alphabetization	:	அகர வரிசைப்படுத்தல்
Alternative	:	மாற்று
Alternative title	:	மாற்றுத் தலைப்பு
Anaesthesiology	:	உணர்வின்மையியல்
Animal Husbandry	:	கால்நடைப் பராமரிப்பு
Animal Sciences	:	விலங்கியல்கள்
Anthology	:	தொகுப்பு
Applied linguistics	:	செய்முறை மொழி இயல்
Applied psychology	:	செயல்முறை உளவியல்
Applied sciences	:	செயல்முறை அறிவியல்கள்
Apprentice	:	தொழில் பழகுநர்
Apprenticeship	:	தொழில் பழகு நிலை
Area Study	:	வட்டார ஆய்ந்தறிதல்
Arrangements	:	ஏற்பாடுகள்
Array	:	அணி
Artificial Composite book	:	செயற்கைக் கலவை நூல்
Astrobiology	:	வான் உயிரியல்
Astrochemistry	:	வான் வேதியியல்
Astronomy	:	வானியல்

Astrology	:	சோதிடம்
Astrometry	:	வான் அளவை
Astrophysics	:	வான் இயற்பியல்
Author	:	ஆக்கியோன்; நூலாசிரியர்
Author analytical	:	ஆக்கியோர் கூறுபாடு
Author catalogue	:	நூலாசிரியர் பட்டியல்; நூலாசிரியர் அட்டவணை
Auxiliary title	:	துணைத் தலைப்பு

B

Bay guide	:	அடுக்கிடை சுட்டி
Behaviour	:	நடத்தை; ஒழுகலாறு
Behavioural sciences	:	நடக்கை இயல்கள்
Bespoken book	:	மிகுதேவை நூல்
Bibliography	:	நூற்றொகை; நூல்விவர அட்டவணை
Binding	:	கட்டுதல்; கட்டமைப்பு
Binding collection	:	கட்டுதல்; திரட்டுதல்; கட்டமைப்புத் திரட்டு
Biochemistry	:	உயிர் வேதியியல்
Biocybernetics	:	உயிர் சீரமைப்பு
Biolinguistics	:	உயிர் மொழியியல்
Biological sciences	:	உயிரியல்கள்; உயிர் அறிவியல்கள்
Biology	:	உயிரியல்
Biomechanics	:	உயிர் இயந்திரவியல்
Biometry	:	உயிரியல் அளவை
Biophysics	:	உயிர் இயற்பியல்
Biosociology	:	உயிரிச் சமூகவியல்
Bipartite	:	இரு பிரிவான
Book card	:	நூல் அட்டை
Book index entry	:	அடைவுப் பதிவு
Book numbers	:	நூல் எண்
Book selection	:	நூல் தேர்வு
Book ticket	:	நூல் அட்டை
Book science	:	நூல் இயல்
Borrower	:	இரவல் பெறுவோர்

Class number	: பகுப்பெண்
Classics	: செவ்வியம்
Classification	: பகுப்பு; வகைப்பாடு
Classificationist	: பகுப்பாக்கியோர்; வகைப்படுத்துனர்
Classification number	: பகுப்பு எண்
Classified catalogue	: வகைப்படுத்தப்பட்ட அட்டவணை; பகுக்கப்பட்ட பட்டியல்
Classified sequence	: பகுக்கப்பட்ட வரிசை; வகைப் படுத்தப்பட்ட வரிசை
Classifier	: பகுப்பாளர்; வகைப் படுத்துனர்
Closed access	: மூடிய முறை
Code	: விதித் தொகுப்பு
Co-extensiveness	: சேர்ந்தமைத் தன்மை; ஒரே கால அளவுக்கு நீடித்திருக்கிற தன்மை
Collaborator	: சேர்ந்து உழைத்தவர்
Collection	: திரட்டு; திரட்டல்; தண்டல்
Collection symbol	: திரட்டுக் குறி
College Library	: கல்லூரி நூலகம்
Colon	: கோலன்
Colon classification	: கோலன் பகுப்பு முறை
Colophon	: நூல் குறிப்பு முகப்புத் தாள்
Commentator	: விளக்கவுரைதாரர்
Commission technique	: குழும நுணுக்கம்; ஆணைய செய்முறை நுட்பம்
Communication theory	: செய்தித் தொடர்புக் கோட்பாடு
Compilation	: தொகுப்பம்; தொகுப்பு;தொகுத்தல்
Compiler	: தொகுப்பாளர்
Composite book	: கலவை நூல்
Compound name	: கூட்டுப் பெயர்
Computer science	: கணிப்பவியல்
Conference technique	: மாநாட்டுச் செய்முறை நுட்பம்
Connecting symbol	: இணைப்புக் குறியீடு
Contents	: பொருளடக்கம்
Contribution	: பங்கு
Contributor	: பங்கு தருபவர்; கட்டுரையாளர்
Co-ordinate	: ஓர் இன ஒருங்கிணை

Botany	: தாவரவியல்
Branch library	: கிளை நூலகம்
Bulletin	: செய்தி அறிக்கை; செய்திஅறிவிப்பு
Business Library	: வணிக நூலகம்

C

Call number	: குறி எண்
Canon	: மரபு விதி; சட்டம்
Canonical sequence	: மரபு வரிசை
Card	: அட்டை
Card Catalogue	: அட்டைப் பட்டியல்
Career	: வாழ்க்கைப் போக்கு; வாழ்க்கைத் தொழில்
Catalogue	: பட்டியல்; அட்டவணை
Cataloguer	: அட்டவணையாளர்
Cataloguing	: பட்டியலிடுதல்; அட்டவணைப் படுத்துதல்
Caution money	: காப்புத் தொகை
Chain	: தொடர்பு (சங்கிலித் தொடர்பு)
Chain procedure	: தொடர்பு நடைமுறை
Changed title	: மாற்றிய தலைப்பு
Characteristic	: இயல்பு; தனிச்சிறப்பான; குறிப்பிடத்தக்க
Charge	: பொறுப்பாக்கு
Charged tray	: பொறுப்பாக்கிய தட்டு
Charging	: பொறுப்பாக்கம்
Chemical Engineering	: வேதியப் பொறியியல்
Chemical sciences	: வேதிய அறிவியல்கள்
Chemical technology	: வேதிய நுணுக்கவியல்
Chemistry	: வேதியியல்
Chronological sequence	: காலவரிசை
Circle Library	: வட்டார நூலகம்
Circulation	: சுற்றவிடல்; சுற்றனுப்புதல்
City Central Library	: நகர மைய நூலகம்
Class	: பகுப்பு
Class index entry	: பகுப்புக் குறிப்புப் பதிவு

Corporate author	:	கூட்டாண்மை ஆக்கியோர்
Corporate body	:	கூட்டாண்மை அமைப்பு
Cross reference	:	தொடர்புக் குறிப்பு
Cross entry	:	தொடர்புப் பதிவு
Cross index entry	:	தொடர்பு அட்டவணைப் பதிவு
Cuboid	:	மூவளவுரு
Cybercultrue	:	தற்சீரமைப்புப் பண்பு
Cybernetics	:	தற்சீரமைப்பு முறைமை
Cytology	:	உயிர்மவியல்

D

Date guide	:	நாட்காட்டி
Date label	:	நாள் சீட்டு
Date guide	:	நாட் கருவி
Decimal Classification	:	பதின்மான வகைப்பாடு; தசாம்ப் பகுப்பு
Declaration	:	சாற்றுதல்; சாற்றுரை
Delivery station	:	வழங்குமுனை
Demography	:	மக்கள் தொகையியல்
Derive composite term	:	பெறுவிய கலவைச் சொல்
Dictionary	:	அகராதி; சொற்களஞ்சியம்
Dictionary catalogue	:	அகரப்பட்டி; அகராதி அட்டவணை
Digit	:	இலக்கம்
Director	:	இயக்குநர்
Directory	:	நெறி காட்டி; விவரக் குறிப்பு
Discharging	:	பொறுப்பு அகற்றம்; வெளியேற்றம்; விடுவித்தல்
Discharging tray	:	பொறுப்பு அகற்றும் தட்டு
Discharging work	:	பொருப்பகற்றும் பணி
Donation number	:	கொடை எண்
Draughtsmanship	:	வரைவுத் திறன்
Due date	:	தவணை நாள்; உரிய நாள்
Duplicate ticket	:	மாற்று அட்டை

E

Earth sciences	:	மண் இயல்கள்

Econometrics	:	பொருளாதார அளவை
Economic cybernetics	:	பொருளாதாரத்தற் சீரமைப்பு
Economics (Macro Economics)	:	(பகுபொருள்) பொருளாதாரம்
Economics in action	:	பொருளாதார நடப்பு
Economics in theory of business enterprises	:	பொருளாதாரத் தொழில் முயற்சி
Editing	:	பதிப்பித்தல்
Edition	:	பதிப்பு
Editor	:	பதிப்பாசிரியர்; இதழாசிரியர்
Educametry	:	கல்வி அளவை
Education	:	கல்வி
Educational cybernetics	:	கல்வித் தற்சீரமைப்பு
Education psychology	:	கல்வி உளவியல்
Educational sociology	:	கல்வி சமூகவியல்
Empirical research	:	செயலறிவு ஆராய்ச்சி
Encyclopaedia	:	கலைக் களஞ்சியம்
Engineering	:	பொறியியல்
Engineering cybernetics	:	பொறியியல் தற்சீரமைப்பு
Engineering statistics	:	பொறியியல் புள்ளியியல்
Entrance	:	நுழைவு
Entry catalogue	:	பதிவு (பட்டியல்)
Entry element	:	முதனிலைப் பதிவு
Epitomizer	:	சுருக்கமாக்கியவர், சுருக்கியவர்
Ergonomics	:	உடல் உழைப்பு
Evaluation methodology	:	மதிப்பீட்டு நெறிமுறை
Evaluationary sequence	:	பரிணாம வரிசை
Exchange	:	மாற்றுப் பரிமாற்றம்
Exchange list	:	பரிமாற்றப் பட்டியல்
Exhibition	:	பொருட்காட்சி
Exhibition technique	:	பொருட்காட்சி நுணுக்கம்
Exit	:	வெளியே போகும் வழி வெளிச் செல்வழி
Exploration geophysics	:	துருவுப்புவி இயற்பியல்
Extension service	:	விரிவுப் பணி
Extract	:	சாரம்; சுருக்கம்

F

Facet : பட்டை
Facet formula : பட்டை வாய்ப்பாடு
Fascicule : பருவ இதழ் பிரிவு மடல்
Fiction : புனை கதை
Filiation : தொடர்பு
Filiatory sequence : தொடர்பு வரிசை
Fine arts : நுண்கலைகள்; கவின் கலைகள்
First vertical : முதல் நெடுக்கு
Five laws of Library Science : நூலகவியலின் ஐந்து கட்டளைகள்
Focus : பரு மையம்; குவி மையம்
Forestry : வன இயல்
Formula : வாய்ப்பாடு; குறிப்புச் சொல்; நூற்பா
Foundry : வார்ப்படச் சாலை
Function : செயல்; விழா; செய் கடமை; நிகழ்ச்சி
Fundamental constituent term : அடிப்படைக் கூறியலான சொல்
Furniture : மனைத்துணைப் பொருட்கள்; அறைகலன்

G

Gangway guide : நூலடுக்கிடை வழிகாட்டி
Gate register : நுழைவாயில் பதிவேடு
Gazette : அரசிதழ்
Generalia : பொதுமை
Generalia class : பொதுமை வகுப்பு
Generalia person study : பொது வாழ்க்கைப் படிப்பு
Genesis : உருவாக்கம்
Geochemistry : புவி வேதியியல்
Geodesy : புவிப்பரப்பு கணிப்பு
Geographical facet : நிலவியல் பாங்குப் பட்டை
Geographical facet sequence : நிலவியல் பாங்குப் பட்டை வரிசை
Geography : நிலவியல்
Geology : புவியியல்

Geophysics : புவி இயற்பியல்
Geopolitics : நிலவியல் அரசியல்
Gross body : பருவுடல்
Guarantee : பிணை
Guarantor : பிணையர்
Guide : வழிகாட்டி
Guide card : வழிகாட்டி அட்டை

H

Half title : உள் தலைப்பு
Handling : கையாளுதல்
Heading : தலைப்பு
Helpful sequence : உதவியாயிருக்கும் வரிசை
Hiding : மறைத்து வைத்தல்
Histology : உயிர்மத் தசைமவியல்
Historical source (theory) : வரலாற்று மூலம் (கோட்பாடு)
History : வரலாறு
Horizontal line : கிடைநிலைக் கோடு
Hospital : மருத்துவமனை
Humanities : உணர்வு இயல்கள்
Human sciences : மனித அறிவியல்கள்
Hypothesis : புனை கொள்கை

I

Impression : பொறிப்பு; கருத்துப் பதிவு
Imprint : வெளியீட்டுக் குறி;பெயர் விவரக் குறிப்பு
Inclusion rotation : உள்ளிட்ட இயக்கக் குறி
Index : அட்டவணை; பொருளடக்க அட்டவணை; குறியீடு
Index card : குறியீட்டு அட்டை
Index entry : அட்டவணைப் பதிவு
Information science : தகவல் இயல்
Information theory : தகவல் கோட்பாடு
Initionym : முதலெழுத்துப் பெயர்

International economics (theory) : பன்னாட்டுப் பொருளாதாரம் (கோட்பாடு)
International economics in action : பன்னாட்டுப் பொருளாதார நடப்பு
International law : பன்னாட்டுச் சட்டம்; உலக நாடுகள் சட்டம்
International politics : பன்னாட்டு அரசியல்
Intrinsic : உள்ளார்ந்த; இயல்பான
Issue : வழங்கல்; வெளியீடு
Issue of periodicals : பருவ வெளியீட்டு இதழ் வழங்கல்
Issue counter : கொடுத்து வாங்குமிடம்

J

Job : வேலை; பணி; தொழில்; அலுவல்
Joint immediate : உடனடி வேலை
Joint author : கூட்டாசிரியர்
Joint editor : கூட்டுப் பதிப்பாளர்
Journalism : இதழ்த் தொழிலியல்; பத்திரிகைத் தொழிலியல்

K

Know : அறி
Knowee : அறிபொருள்
Knower : அறிந்திருக்கிறவர்; அறிந்துள்ளவர்;
Knowledge : அறிவு; அறிந்த செய்தி; தகவல்

L

Laboratory service : ஆராய்வகப் பணி
Language : மொழி
Later title : பின் தலைப்பு
Law : சட்டம்
Leading line : தலைமைக் கோடு
Leading section : தலைமைப் பிரிவு
Librachine : உந்து நூலகம்
Librarian : நூலகர்
Librarian, Grade - I : முதல் நிலை நூலகர்
Librarian, Grade - II : இரண்டாம் நிலை நூலகர்

Librarian, Grade - III	மூன்றாம் நிலை நூலகர்
Library	நூலகம்
Library authorities	நூலகத்தார்
Library Bill	நூலகச் சட்டப் பகர்ப்பு
Library Act	நூலகச் சட்டம்
Library Science	நூலகவியல்
Librametry (bibliometry)	நூலக அளவை
Linguistic cybernetics	மொழி இயல் தற்சீரமைப்பு
Linguistics	மொழியியல்
List	பட்டியல்
Literature	இலக்கியம்
Loan	இரவல்; கடன்
Local initiative	தல முயற்சி
Local library Authority	மாவட்ட நூலக ஆணைக் குழு
Local Library Service	மாவட்ட நூலகப் பணி
Location	அமைவிடம்
Loose leaf catalogue	உதிரித் தாள் பட்டியல்

M

Main class	பெரும் பகுப்பு
Main entry	பெரும் பதிவு
Maintenance section	பேணுகைப் பிரிவு; பராமரிப்புப் பிரிவு
Management Science	மேலாண்மையியல்
Mass communication	மக்கள் தொடர்பு
Mathematical Linguistics	கணக்கு மொழியியல்
Mathematical Sciences	கணக்கு இயல்கள்.
Mathematics	கணக்கு
Medical cybernetics	மருத்துவத் தற்சீரமைப்பு
Medical jurisprudence	மருத்துவச் சட்ட இயல்
Medical Sciences	மருத்துவ இயல்கள்
Medical technology	மருத்துவத் தொழில் நுட்பவியல்
Medicine	மருந்து
Medicometry	மருத்துவ அளவை
Member	உறுப்பினர்

Membership card	:	உறுப்பினர் அட்டை
Metrology	:	அளவை இயல்
Microbiology	:	நுண் உயிரியல் அளவை
Military Science	:	இராணுவ இயல்
Mining	:	சுரங்க இயல்
Mobile Library	:	இயங்கும் நூலகம்
Molecular Biology	:	நுண்ணுயிரியல்
Multi-faceted	:	பலமுகப்பு அட்டை
Multifocal	:	பல குவிமையத்தைச் சார்ந்த
Multivolumed	:	பல தொகுதியான
Museology	:	அருங்காட்சியகவியல்
Mysticism	:	சித்தியல்

N

National Central Library	:	தேசிய மைய நூலகம்
Natural Sciences	:	இயற்கை இயல்கள்
Notation	:	குறிமான முறை; இலக்கம் குறியீடு
Note	:	குறிப்பு
Notes taking	:	குறிப்பு எடுத்தல்
Number	:	எண்; எண்ணிக்கை; இலக்கம்
Number (of a periodical)	:	பருவ இதழ் எண்
Nursing	:	செவிலிப் பணி

O

Octave principle	:	எட்டாகக் கொள்ளும் கொள்கை
Off-print	:	மிகைப்படி
Open access	:	திறந்த முறை
Open notation	:	திறந்த குறிமான முறை (குறியீடு)
Operation research	:	வேலைப்பாடு ஆய்வு
Ordering	:	ஆணையிடல்; கட்டளையிடல்
Ordinal number	:	தொடர் வரிசை எண்
Ordinary composite book	:	பொதுக் கலவை நூல்
Organization	:	அமைப்பு; சங்கம்; நிறுவனம்
Over due	:	காலக்கடப்பு; தவணை தாண்டிய; தவணை கடந்த

P

Pamphlet	:	துண்டு வெளியீடு; சிறு வெளியீடு
Papyrus	:	கோரைத் தாள்
Parallel movement	:	இணையான இயக்கம்
Parchment	:	இளம்பிராணித் தோல்
Parody	:	ஏளனச் செய்யுள்
Part	:	பகுதி; பாகம்
Paste down catalogue	:	ஒட்டிச் சேர்க்கும் பட்டியல்
Penultimate	:	கடைசிக்கு முந்திய
Periodical	:	பருவ இதழ்
Periodical publication	:	பருவ இதழ் வெளியீடு
Personal author	:	தனிமுறை ஆக்கியோன்
Personality	:	ஆளுமை
Personnel	:	ஆட்தொகுதி; பணியாளர்
Pharmacognosy	:	மருந்தியல்
Phase	:	கலைக்கூறு
Phase relation		கலைக்கூறுத் தொடர்பு
Phased	:	திட்டம்
Phillology	:	மொழி இயல்; மொழி நூல்
Philosophy	:	தத்துவம்
Physical exercise and sports	:	உடற்பயிற்சி விளையாட்டு
Phylogenesis	:	கிளை வளர்ச்சி
Physical Sciences	:	இயல்பு அறிவியல்கள்
Physics	:	இயற்பியல்
Planning	:	திட்டம்
Plant Sciences	:	தாவர இயல்கள்
Policy Sciences	:	கொள்கை இயல்கள்
Political Science	:	அரசியல்
Political Sociology	:	அரசியல் சமூகவியல்
Politimetrics	:	அரசியல் அளவை
Postulate	:	அடிப்படை நிலை
Prenatal Classification	:	முதனிலைப்பகுப்பு; முந்திய வகைப்பாடு
Principle	:	கொள்கை

Problem facet	:	பிரச்சினைப் பட்டை
Procedure	:	நடைமுறை
Profession	:	வாழ்க்கைத் தொழில்
Professional	:	தொழிலர்
Pseudonym	:	பொது நல்வாழ்வு (புனை பெயர்)
Psychobiology	:	உளவுயிரியல்
Psychocybernetics	:	உளவியல் தற்சீரமைப்பு
Psycho linguistics	:	உளவியல் சார்ந்த மொழியியல்
Psychology	:	உளவியல்
Psychometry	:	உளவியல் அளவை
Public Administration	:	பொது ஆட்சி
Public Health	:	மக்கள் நல்வாழ்வு
Public Library	:	பொது நூலகம்
Public Library Act	:	பொது நூலகச் சட்டம்
Pure Science	:	தூய அறிவியல்

Q

Qualification	:	தகுதி
Qualified	:	தகுதியுள்ள
Quality	:	தரமான; தரம் தன்மை;
Quotation	:	மேற்கோள்;பண்பு; விலைப்புள்ளி;

R

Rack	:	நிலை அடுக்கம்; நூலடுக்கு
Readability	:	படிப்பதற்கேற்ற
Reader	:	வாசகர்
Reader's ticket	:	வாசகர் சீட்டு
Reading method	:	படிப்பு முறை
Reading room	:	படிப்பறை
Ready Reference Service	:	உடனடிக் குறிப்புப் பணி
Re-arrangements	:	திருத்தியடுக்குதல்
Recto	:	நூலின் பலப் பக்கம்
Reference Librarian	:	குறிப்புதவி நூலகர்
Reference Service	:	குறிப்புதவிப் பணி
Regional School Library	:	மண்டலப் பள்ளி நூலகம்
Regulation	:	ஒழுங்குமுறை விதி

Religion	:	சமயம்
Reprint	:	மறு பதிப்பு
Reprinted	:	மறு பதிவான
Research Library	:	ஆராய்ச்சி நூலகம்
Research Methodology	:	ஆராய்ச்சி நெறிமுறை
Reserved collection	:	ஒதுக்கப்பட்ட திரள்
Return	:	திருப்பு
Return counter	:	திருப்பிக் கொடுக்குமிடம்
Return date	:	திருப்பி கொடுக்கும் நாள்
Reviser	:	திருத்துபவர்
Roll	:	பட்டியல்; சுருணை
Room	:	அறை
Routine	:	வாலாயம்
Rule	:	விதி; முறைமை
Rural Central Library	:	ஊரக மைய நூலகம்

S

Sanitorium	:	நல்வாழ்வு மனை
Schedule	:	அட்டவணை
Scheme	:	திட்டம்; ஏற்பாடு
School Library	:	பள்ளி நூலகம்
School of thought	:	குழுக்கருத்து
Sciences (Natural and Social)	:	(இயற்கை : சமூக) அறிவியல்கள்
Second vertical	:	இரண்டாம் நெடுக்குக் கோடு
Secretarial Practise	:	செயலாண்மைப் பயிற்சி
Serial	:	தொடர்
Serial number	:	தொடர் எண்
Series	:	பதிப்பு வரிசை; தொடர் தொகுதி
Series Note	:	பதிப்பு வரிசைக் குறிப்பு
Set	:	தொகுதி
Shape	:	உருவம்; வடிவு
Shelf	:	தட்டு
Shelf arrangement	:	தட்டு அமைப்பு
Shelf guide	:	தட்டுக் காட்டி
Shelf register card	:	தட்டுப் பதிவேடு அட்டை

Shelf section	:	தட்டுப் பிரிவு
Shelf work	:	தட்டுவேலை
Short title	:	சிறு தலைப்பு
Simple book	:	பொதுமை நூல்
Single volumed	:	ஒரு தொகுதியாக
Social medicine	:	சமூக மருத்துவம்
Social Sciences	:	சமூக அறிவியல்கள்
Social work	:	சமூகப்பணி
Socio cybernetics	:	சமூகத் தற்சீரமைப்பு
Socio linguistics	:	சமூக மொழியியல்
Sociometry	:	சமூக அளவை
Sorting	:	பிரித்தல்; வகைப்படுத்தல்
Sorting tray	:	இனம் பிரி தட்டு
Space	:	இடம்; விண்வெளி
Space physics	:	விண்வெளி இயற்பியல்
Special cross reference entry	:	சிறப்புக் குறுக்குக் குறிபபுப் பதிவு
Specificact on methodology	:	குறிப்பிடுகை நெறிமுறை
Specific subject	:	குறிப்பிட்ட பொருள்
Stack	:	அடுக்கு
Stack room	:	அடுக்கறை
Staff	:	பணியாளர்
Standard	:	தரம்; படி நிலை
Standard card	:	நிலையான அட்டை
Standardisation methodology	:	தர நிர்ணய நெறிமுறை
Standing vendor	:	நிலையான விற்பனையாளர்
State Central Library	:	மாநில மைய நூலகம்
Statistical calculus	:	புள்ளியியல் நுண்கணிதம்
Statistical Geography	:	புள்ளியியல் நிலவியல்
Statistics	:	புள்ளியியல்
Statistics Register	:	புள்ளி விவரப் பதிவேடு
Study of Entry phenomenon	:	குறிப்புப் பொருள் பதிவேடு
Sub - heading	:	உட் தலைப்பு

Subject	:	பொருள்
Subject analytical	:	பொருள் பகுப்பாய்வான
Subject matter	:	பொருள் அடக்கம்
Subordinate	:	சார்நிலை
Subscription	:	தவணைக் கட்டணம்; பங்கு வரி
Substance facet	:	பொருள் பட்டை
Successive	:	அடுத்தடுத்த; தொடர்ந்து வருகிற
Supply	:	தரவு; வழங்கல்
Symbol	:	அடையாளம்; சின்னம்
Symbolism	:	குறியீடு
System	:	முறைமை
Systemology	:	முறைமை இயல்

T

Tab		நாடா வார்
Table (of entries)	:	பதிவுப் பத்தி
Tag	:	கூர் புரி; இணைப்புப் புரி
Technical work	:	தொழில் நுட்பப் பணி
Technique	:	செய்முறை நுட்பம்; உத்தி
Technology	:	தொழில்நுட்பவியல்
Temporary collection	:	தற்காலிகத் திரட்டு
Theory	:	கோட்பாடு
Three-phased	:	முப்பகுதியான
Tier guide	:	அடுக்கு வழிகாட்டி
Time	:	காலம்
Title	:	தலைப்பு; முகப்பு
Title-page	:	முகப்புப் பக்கம்
Title - back of	:	முகப்புப் பக்கப் பின்பகுதி
Train	:	பழக்கு
Translator	:	மொழி பெயர்ப்பாளர்
Travalogue	:	பயண நூல்
Trend report	:	போக்கறிக்கை
Tray	:	தட்டு; மரவை
Trial and error	:	செய்து திருத்தல்
Two-Phased	:	இரு பகுதியான

U

Unifocal : ஒன்று குவித்த
Unipartite : ஒரிருமை
Universe of subject : அறிவு உலகம்
University Library : பல்கலைக் கழக நூலகம்
Useful arts : பயன்படு கலைகள்

V

Vendor : விற்பவர்
Verso : நூலின் இடக்பக்கம்
Vertical file : நெடுக்குக் கோப்பு
Volume : தொகுதி; அளவு
Voluntary : தன்னியலான; தன் விருப்பார்ந்த

W

Wants : தேவை
Weight : எடை; நிறை; பளு
Welding : பற்ற வைத்தல்
Welfare State : மக்கள் நல அரசு
Who is Who : யார் யார் (யார்? எவர்?)
Wicket Gate : கதவுக்குள் கதவு

X

Xenial : விருந்தோம்பும்
Xenogamy : அயல் கருவுருதல் (தாவர இனம்)

Y

Year book : ஆண்டு ஏடு

Z

Zoology : விலங்கியல்

Gorman uncovers scholar's magnum opus

S.R. RANGANATHAN PUBLISHED HIS FIVE LAWS OF library science many years ago. I have always felt that the five laws have a place in the ur-literature of information and library science. Imagine my pleasure, therefore, when I came across an annotated version of the laws in the papers of my late friend and colleague N. Norbert Caulking, eminent informationist and scholar.

My Joy was, alas, short-lived. All that has survived are the first few pages (See below). My search for the remainder of what must have been a definitive, nay, magisterial work, has not yielded results, and I fear that Caulking's crowning achievement may never see the light of common day. What has survived is a fragment, but such a glorious fragment!

The manuscript is dated March 6, 1981, and may now be found in the N. Norbert Caulking Archieve of Toblerone University InfSci Center.

- Michael Gorman, Editor, N.N. Caulking papers

THE FIVE LAWS OF LIBRARY SCIENCE OF S.R. RANGANATHAN

as annotated by N. Norbert Caulking

The[1] Five[2] Laws[3] of Library[4] Science.[5]

[1]"The" here seems not to be justified by an examination of the literature. One need only refer to Spink and Szenk* (+) to see that a number of "laws" exist implicitly and explicitly. Though Crankshaw* and, in a very different vein, Klopstock* dispute the general thrust of the Spink/Szenk conclusion, we can safely assume that the "The" would more properly have been omitted from the title.

[2]Although the "Laws" (see 3. below) appear, to the superficial reader, to be five in number, it can confidently be stated that

linguistic analysis (most obviously in the manner of L.S. Caton*, Earwicker, *and Threepwood*) shows that, if the "Laws" are indeed laws, they are 17 in number. A simple illustration of the results of such analysis can be seen in Hochtraut's study of the instruction "No Smoking" in public libraries.* Here the injunction is demonstrated, by regressive analysis and straightforward minimalist reduction, to imply a number of other instructions, of which "Do not apply a flame to the end of the cigarette, pipe, ect., which is not "science" when heuristic values are assigned by no more (nor, to be lighthearted for a moment, less) than 73 percent of any observed population. Cocklecarrot and Lycanthrope (passim)* have observed that "Science-as-an-Art" embraces "Art-as-a-science" among no less than 37 percent of academics and street vendors. This, though immensely telling in itself, cannot but be diminished by the observations of Bismarck*, Egernhammer, and Politnikov* (of the "nouvelle vague" school of Bavarian biblio-informatico-pragmatists).

To oversimplify grossly, these observations state (to Paraphrase Smerm and Phewty*) that paradigms of an infrastructure cannot by their nature contain informational-transfer mentefacts that aspire to the status of ontological phenomena. It can safely be assumed that neither "Science" nor "science" are justified in this context. What then is the word that Ranganathan should have used in his title? I would suggest that "praxis" is about as near to his essential meaning as modern scholarship can achieve.

CAULKING'S REVISION : Given the analysis contained in the preceding annotations we are fear, cause little more than a snicker to the informationist of the 1980s. For the moment, let us assert (with the very considerable support of Nanker and Phelge*, Mont-Tremblant*, and Saaraauuvinenen*) that a substitution of "electronic Micro-data" for "Books" lends substance and authenticity to an otherwide very flawed text.

[7]"for" is, in this context, deceptively unambiguous. Studies (by, inter alia, Jones*, Jones, and Jones, and Jones*) have shown that the concept of "for" is confused with that of "from" in many libraries and, in certain boroughs of New York and the Cleveland Metroplex, with "against." To the question "What are books for?" no fewer than 87.45 percent of the respondents gave answers that were of striking ambiguity. This dilemma is, of course, clear-cut when contrasted with the reso-

nance of the effect of leaving "for" out.

There is only one solution. Multiple-choice instructions meet the Zeitgeist (see Gnsh*, *Tallt-rouser, and Blender and Juicer*) and have been shown to be acceptable to 67.81 percent of any scientifically structured population and, more germanely, to 81.67 percent of academic library non-users. We can, therefore, with confidence in your mouth" (itself an instruction with a complex set of subtexts) are merely the most obvious.

[3]Here we are in very deep waters indeed. Slimm and Goodbody's* survey of a representative number of academic library users and fishmongers demonstrated that 59.75 percent of the respondents believed that all "laws" embrace all "non-laws." Thus, a "law" is at once a law and not a law and, therefore, cannot in conscience be described as a "law." This clear statement is rendered more complex by Staines' and Staines' Corollary* which can here be quoted in full: When chi can be no greater than pi, certainty is lost. Conclusive, indeed!

[4]See Diggins.*

[5]Did Ranganathan really mean "science" when he wrote "Science?" An exmaination of the literature and of major survey results shows "Science" is quite often confused with safe in concluding that the title which Ranganathan rendered as ""The Five Laws of Library Science" should, in fact, read :-

"Seventeen (or More) Laws (embracing non-Laws) of Information Center Praxis"

This rendering may lack the superficial simplicity of the original but possesses the structural integrity which the original was glaringly without.

. . . .

(+) (Asterisks, here and later, refer to entries in a bibliography which either Caulking did not compile or which has been lost. -M.G.)

. . . .

*(This is one of Caulking's more enigmatic observations. See my "Some Observations upon Caulkin's Diggins Annotations" in the April 1989 issue of Strands : a Bibliographic Monthly. - M.G.)

Law 1. Books[6] are for[7] use[8].

[6]Let us, in charity towards the primitivism of the past, not ridicule too heavily the use of the archaic term "Books." However, we must not extend that indulgence to suggesting the primacy of the "book." Not only would this be

philosophically wrong, but also it would ignore numerous findings by, to name but a few, Pushpin,* Krummbitt*, Mole and Ratti*, and Mogadon.

Premature and infantile antibookists confused their correct analysis of the end of relevance of the printed word with espousal of the "audio-visual" media. This led to the proposals of Gnip and Gnop* that the first "law" be amended to read : "Audiovisual materials (and a few books) are for use." This naive reconstruction will, I propose : "Electronic Micro-data are from/by/against/ with use" (but see 8. and 17 below).

[8]"use" here is resonant with the contiguity of abstraction (as Filbey,* Burgess,* and Maclean* have often, and with some playfulness, pointed out). Studies such as those conducted among the street people of San Francisco by Belladonna and Ergot* have shown that use is variously defined (with standard deviation) by up to, and no less than, 81.99 percent of the specific density of a given population. This is, on the face of it, no less than surprising. However, a calm reassessment of the data (such as that carried out by Pumkin and Pye*) shows that such a use of "use" can, in some instances, be acceptable to the majority of blue-collar information scientists. "Use" being acceptable (and, at the same time, unacceptable) a prudent qualification is called for.

CAULKING'S REVISION : The preceding shows us that a strucutural re-reading of the first "Law" can be proposed as follows:

"Electronic Micro-data are from/by/against/with use (if releveant at that point of time).

Thus, we see that rigorous re-interpretation can resolve certain ambiguities in presentation......

(Here, alas, Caulking's manuscript ends. - M.G.)

Article: `Reprinted by permission of the author and publisher from AMERICAN LIBRARIES, 16:5 (May 1985) 329.

Copyright. 1985 by the AMERICAN LIBRARY ASSOCIATION.

Source : Library Literature. 1985. Pages 39-41. Best of 1985 ``LIBRARY LITERATURE" out put selections "GARUDAZHVAR"

புகழ்மிக்க இன்றைய எழுத்தாளர் சுஜாதா சொல்கிறார் :

கேளுங்கள்.....

எல்லாப் பாடங்களும் தமிழில் தான் படித்தேன. இங்கிலீஷ் உட்பட சௌரிராஜ அய்யங்கார் தமிழில்தான் சொல்லித் தருவார். அதனால் பிற் காலத்தில் ஏதும் இழப்பு என் வாழ் வில் ஏற்பட்டு விட்டதாகத் தெரிய வில்லை. தேவைப்பட்ட போது தேவைப்பட்ட அளவுக்கு ஆங்கிலம் கற்று என்னால் வாழ்வில் ஓரளவுக்கு முன்னேற முடிந்தி ருக்கிறது. இதற்கு முக்கிய காரணமாக நான் தமிழில் படித்ததையும் சொல்வேன். தாய் மொழியில் படித்ததால் அடிப்படை யாக என் மனத்தில் மழுப்பலும் குழப்பமுமில்லாமல் பாடங்களைப் புரிந்து கொள்ள அறிவு விதைக்கப் பட்ட தாகச் சொல்வேன்.

தாய்மொழியில் புத்தகங்கள் இல்லை; தாய் மொழியில் படித்தால் வேலை வாய்ப்புகள் இல்லை எனச் சொல்லி ஆங்கில மோகத்தை நம் இளைஞர்களிடம் வளர்த்தத சுதந்தர இந்தியாவின் மிகப் பெரிய மோசடி. அதனால் நாம் எவ்வளவு இழந்திருக்கி றோம் என்பதை ஜப்பானியரையும், சீனா, கொரியா தேசத்தவர்களையும் பார்த்தால் தான் புரியும்.

நன்றி : கல்கி வார இதழ்.

54.(43) 26.5.1996 பக்கம் 15

ஒரு புத்தகத்தை தொடங்கி விட்டதற்காக மட்டும் அதை முழுவதும் படிக்க வேண்டியதில்லை.

– விதர்ஸ்பூன்

நூலக தகவல் விஞ்ஞானி பௌர்ணமி தாசன்

- உலகம் பலவிதம் .....
- மொழி பெயர்ப்பும் பல விதம்.....
- அஞ்சல்வழிக் கல்வி மூலமாக நூலக தகவல் அறிவியல் அரிச் சுவடி நிலையில் (C.L.I.Sc.), தமிழ் மூலம் பாடங்களைப் படிப்பதை தமிழக மாணவர் கள் பெரிதும் விரும்பு கின்றனர். வரவேற்கின்றனர். பயனுள்ளது என பாராட்டி மகிழ்கின்றனர்.
- சென்னைப் பல்கலைக்கழக அஞ்சல்வழியில் 10 ஆண்டு களுக்கு முன்பே தமிழ் வழி பாட வகுப்புகளை துவக்கிய அமரர் பேராசிரியர் பி. கங்கா தரராவைப் போற்ற வேண்டும்.
- காலத்தின் கட்டாயத்தால் செய் யப்பட்டிருந்தாலும், தமிழர் கள் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுவிட்டார் அந்த ஆந்திர மாநில மகான்.
- பட்ட, பட்ட மேற்படிப்பு நிலைகளிலும் தமிழே பாட மொழி என்ற நிலையை 1997 ல் துவக்கிவிட வேண்டும்.
- தமிழில் பாடம் நடத்தி, பாடப் புத்தகங்களையும் படைப் போம். நூலக இலக்கியம் வளர்ப்போம்.

- நூலகம் இலக்கியம் முழு மூச்சுடன் அறிஞர் குழு ஆலோசனையுடன் தொண்டாற்ற முனைந்துவிட்டது.
- தஞ்சை, சீர்காழி உபய வேதாந்தரபுரத்து மகான் ரங்கநாதன் அமர காவியங்களை, நூலக இலக்கிய உலகுக்கு விட்டுச் சென்றுள்ளார்.
- அவை அனைத்தும் ஆங்கிலத்தில் இருப்பது **நமது தவக் குறை**வே.
- **எங்கும் தமிழ், எதிலும் தமிழ், இன்றும் தமிழ் என்றும் தமிழ்.... தமிழ் உணர்வு கொப்பளிக் கும் இந்நாளில், நூலக இலக்கிம் தமிழில் பட்ட, பட்ட மேற்படிப்பு நிலைகளுக்கும்** உதவ வேண்டும்.
- அறிஞர் குழு இதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்கிவிட்டது ஓசைபடாமல்.....
- நூலகம் இலக்கியம் அவற்றை வெளியிட்டு நூலக அறிஞர்களை பெருமைப்படுத்தும். கௌரவிக்கும்.

> நூலை நேசிப்பவனுக்கு நண்பர்கள் தேவையில்லை. அறிவுரை கூறுவோர் வேண்டாம். மகிழ்ச்சியூட்ட தோழர்கள் அவசியமில்லை. சுகம் தர சுற்றமும் வேண்டாம்.
>
> - பாரோ.

- தமிழர்களே, வாசகர்களே, உங்கள் சிந்தனைகளை எங்களுக்கு எழுதுங்கள்.
- டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் *1928* லேயே FIVE LAWS OF LIBRARY SCIENCE என்ற நூலை வெளியிட்டார்.

> உன்னுடைய கடிகாரத்தைப் பாக்கெட்டில் வைப்பது போல் உனது கல்வியையும் மறைவாக வைத்துக் கொள். அது இருப்பதைக் காட்டுவதற்கு அவசியம் இல்லாது வெளியே எடுக்காதே.
>
> செஸ்டர் பீல்டு (யா(ர்)டு)

- *1888* லேயே மனோன்மணியம் ஆசிரியர் 'நூற்றொகை விளக்கம்' நூலகப் பகுப்பியல் கூறுகளை கவிதை வடிவில் வெளியிட்டார்.
- நூறு ஆண்கள் உருண்டு ஓடிவிட்டன.
- *(1996)* இன்று நூலக இலக்கியம் *100* புத்தகங்களை கூட பெறவில்லை.
- தமிழர்கள் இனியாவது அக்கறை காட்டவேண்டும்!
- Five Laws...... எப்படியெல்லாம், பல்வேறு கால கட்டங்களில் மொழி பெயர்க்கப்பட்டன என்பதை, இந்தக் குறிப்புகளில் காணலாம்.
- மொழி பெயர்ப்பு ஒரே மாதிரியாக அமைய, புதிய தடத்தை, இது நமக்கு காட்டுகிறது.

நூலகப் பணிக்கு : ஐந்திலக்கணம்

உலக நூலகங்கள் அனைத்தின் செயல்பாட்டிற்கும் பயன்படக் கூடிய Five Laws of Library Science என்ற சாகாவரம் பெற்ற classic நூலகக் காவியமாகும். எஸ்.ஆர். ரங்கநாதன் படைத்த பல நூலகக் காவியங்களுள் இதுவே முதல்.

அனைவருக்கும் புரியக்கூடிய வகையில் (ISI) தரக் கட்டுப்பாட்டுடன் மொழி பெயர்ப்பு அமைந்தால், நூலக இலக்கியம் வேகமாக வளரும்.

கடந்த நூறு ஆண்டுகளில் சுமார் நூறு நூலக இலக்கிய நூல்களையே இனம் காண முடியும். நூலக இலக்கிய வரலாற்றை, 1960 லிருந்து நேரிடையாக கவனித்து ஆராய்ந்து வரும் நூலக விஞ்ஞானி "நூலக இலக்கிய வரலாறு" - தொடரைத் துவங்குமுன் நூலக பஞ்ச சீலம் - மொழிபெயர்ப்பு விநோதங்களை இங்கு குறிப்பிட்டுள்ளார்.

- ஆசிரியர்

மூலபாடம்

The Five Laws of Library Science :

1. BOOKS ARE FOR USE
2. EVERY READER HIS BOOK
3. EVERY BOOK ITS READER
4. SAVE THE TIME OF THE READER
5. LIBRARY IS A GROWING ORGANISM (ORGANIZATION)

Late Dr. S.R. Ranganathan

ग्रन्तालय-शास्त्र-पञ्च-सूत्राणि

ग्रन्यालयी सदासेवी पञ्चसूत्री परायणः ।

ग्रन्या अध्येतुम् एते च सर्वेभ्यः स्वं स्वमाप्नुः ॥

अध्येतुः समयं शेषेत्-आलयो नित्यमेव च ।

वर्धिष्णुः एव चिन्मूर्तिः पञ्चसूत्री सदा जयेत् ॥

Rendered into Sanskrit by the late Mahamahopadhyaya, Prof: S. Kuppuswami Sastriar.

நூலக இயலின் ஐந்து விதிகள்

1. நூல்கள் பலவும் பயில்வதற்கே
2. படிப்போர்க் கேற்ற நூல்கள்
3. நூல்கட் கேற்ற படிப்போர்
4. படிப்பவர் நேரம் பேணு
5. நூலகம் என்றும் ஓங்கிவளர்வதே

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் மேற்பார்வையில், மானமிகு திரு இரா. முத்துகுமாரசாமி எம்.ஏ., டி.எல். எஸ்ஸி. (இன்றைய பிரபல பதிப்பகமான "கழகம்" தலைவர் ஆவார். தமிழாக்கம்)

மேற்கண்டவை, கிரந்தாலய சாஸ்திரத்தின் அஸ்திவாரமான ஐந்து சூத்திரங்கள்

- *த. கிருஷ்ணமூர்த்தி*

1920 களில் ஆங்கிலம் கற்றவர்கள் தமிழில் சிந்திப்பது குறைவாகவே இருந்த காரணத்தால், டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன், தமிழ் உருவை வெளியிடாமல் விட்டுவிட்டார்.

அதனால், பின்னால், இவற்றை மொழிபெயர்த்தவர்கள், தங்கள் மனம் போல் - "வாய் புளித்ததோ? மாங்காய் புளித்ததோ?" - பாணியில் மொழி மாற்றம் செய்தனர்.

மூல (கரு) சாரம்சம் மொழி பெயர்ப்பில் வெளியாகாமல், (உருவாக்கி விட்டனர்) தமிழில் மொழி பெயர்த்து விட்டனர். தரக் கட்டுப்பாட்டுக்குள் (Standardization) உட்பட்டிருந்தால், இன்று ஒரு கருத்துக்கு பல்வேறு வார்த்தை கொண்ட மொழி பெயர்ப்புகளை தவிர்த்திருக்கலாம். இனியாவது, விழிப்புடன் செயல்படுவோம்!

நூலக ஐந்து சூத்திரங்கள்

Five Laws of Library science

Five = ஐந்து = பஞ்ச

Laws = சட்டங்கள் = சீலம், விதிகள், லட்சணங்கள்

of =

Library = நூலக தகவல் = நூலக செய்தி

Science = அறிவியல் = விஞ்ஞானம்



தலைப்பு : அசலும் நகலும்

FIVE LAWS OF LIBRARY SCIENCE

S.R. Ranganathan 1928

1. **நூலக பஞ்ச சீலம்** த. கிருஷ்ண மூர்த்தி, கலைக் கோவில். 1952.
2. **நூலக இயலின் ஐந்து விதிகள்** இரா. முத்துகுமாராசாமி, கழக நூற்பட்டி 1961.
3. **நூலக இயலின் ஐந்து விதிகள்** திருமலை, முத்துசாமி 1959
4. **நூலக இயலின் ஐந்து விதிகள்,** பி.ஏ. மோகன்ராஜ். 1969. சென்னைப் பல்கலைக்கழக துண்டு வெளியீடு.
5. **நூலக இயலின் அடிப்படை விதிகள் ஐந்து,** வத்ராயிருப்பு நூலக மலர். 1968.
6. **நூலக ஐந்திலக்கணம்**, மதுரை நூலக மல் 1970.
7. **நூலக பஞ்ச சீலம்,** பொது நூலக இயக்கம்.
8. **ஐந்து கட்டளைகள்,** வே. தில்லை நாயகம், நூலக உணர்வு. 1971.
9. **நூலக பஞ்ச சீலம்,** மதுரை மாவட்ட, நூலக மலர். 1968.
10. **நூலகப் பணி - ஐந்து கட்டளைகள்**, தமிழக பொது நூலகத் துறை.

> ***நாம் பெறும் கருத்துக்களின் அறிவைச் செயலில் பயன்படுத்தா விட்டால், நூல்கள் வெறும் பழைய தாள்களேயாம்.***
>
> \- புல்வெர்

கருவும் உருவும்

I. Books are for use

1. படிப்பதற்கே புத்தகம்
2. நூல்கள் பலவும் பயில்வதற்கே
3. படிப்பதற்கே நூல்கள்
4. நூல்கள் பலவும் பயில்வதற்கே
5. படிப்பதற்கே புத்தகங்கள்
6. படிப்பதற்கே நூல்
7. நூல்கள் படிப்பதற்கே
8. நூல்கள் படிப்பதற்கே
9. படிப்பதற்கே நூல்
10. நூல்கள் பயன்படுவதற்கே

II. Every reader his/her book

1. அனைவருக்கும் புத்தகம்
2. படிப்போர்க்கேற்ற நூல்கள்
3. அனைவருக்கும் நூல்கள்
4. படிப்போர்க்கேற்ற நூல்கள்
5. ஒவ்வொருவருக்கும் ஏற்ற புத்த கங்கள்
6. படிப்பவருக்குத் தகுந்த நூல்
7. ஆளுக்கொரு நூல்
8. ஆளுக்கொரு நூல்
9. படிப்பவருக்குத் தகுந்த நூல்
10. ஒவ்வொரு வாசகருக்கும் அவர வருக்கேற்ற புத்தகம்.

III. Every book its reader

1. படிக்காத புத்தகம் கூடாது
2. நூல்கட்கேற்ற படிப்போர்
3. படிப்போர் ஏற்காத நூல் பய னற்றது

4. நூல்கட்கேற்ற படிப்போர்
5. ஒவ்வொரு புத்தகத்திற்கும் வாசகரை தேடுதல்
6. நூலுக்குத் தகுந்த படிப்பவர்
7. நூலுக்கு ஒரு ஆள்
8. நூலுக்கு ஒரு ஆள்
9. நூலுக்குத் தகுந்த படிப்பவர்
10. ஒவ்வொரு புத்தகத்திற்கும் அதற்கேற்ற வாசகர்

IV. Save the time of the reader/staff

1. காலவிரயம் கூடாது
2. படிப்பவர் நேரம் பேணு
3. படிப்போரின் காலத்தை வீணாக்காதே
4. படிப்போர் நேரம் பேணு
5. வாசகர் நேரத்தை பாதுகாத்தல்
6. படிப்பவர் காலம் வீணாக்காதீர்
7. காலம் கருது
8. காலம் கருது
9. படிப்பவர் காலம் வீணாக்காதீர்
10. வாசகரின் நேரத்தை வீணாக்காதே, பணியாளரின் நேரத்தையும் வீணாக்காதே

நான் மதிப்புயர்ந்த விஷயங்கள் எவைகளையாவது கண்டுபிடித்துள்ளேன் என்றால், அது என்னுடைய பொறுமையுள்ள கவனத்தினால்தான். வேறு பிரமாத சக்தியால் அன்று.

- ஸர். ஐசக் நியூட்டன்

V. Library is a growing organism

1. உயிருள்ள ஜீவன் (Organism)/ வளரும் ஸ்தாபனம் (Organisation)
2. நூலகம் என்றும் ஓங்கி வளர்வதே.
3. நூலகம் வளரும் தன்மையது.
4. நூலகம் என்றும் ஓங்கி வளர்வதே
5. நாள்தோறும் வளரும் நிலையமாக நூலகத்தை வைத்தல்
6. நூலகம் வளரும் ஓர் அமைப்பு
7. நூலகம் வளரும்
8. நூலகம் வளரும்
9. நூலகம் வளரும் ஒரு அமைப்பு
10. வாசகசாலை வளர்ச்சியடைந்து கொண்டே செல்லும் ஓர் இயக்கம்.

எனக்குக் கொஞ்சம் பணம் கிடைத்தால், நான் புத்தகங்கள் வாங்குகிறேன். மேலும் பணம் மிச்சமிருந்தால் நான் உணவும், உடையும் வாங்குகிறேன்.

- எராஸ்மஸ்.

எஸ்.ஆர். ரங்கநாதனே, தனது முன்னுரையில் கூறியது போல், திரு கிருஷ்ண மூர்த்தியின் மொழியாக்கம் மிகவும் பொருத்தமாகவும், மூலக் கருத்துக்களை உள்ளடக்கியதாயும், பயனுடையதாயும் உள்ளது. ''ஒரு பானைக்கு, ஒரு சோறு பதம்!'' - போதுமே!!

மற்ற மொழியாக்கங்கள் பற்றி வாசகர்கள் கருத்துக்களை எழுதி அனுப்ப வேண்டுகிறது நூலகம் இலக்கியம்.

✉ கடிதங்கள்

✉ நூலகம் இலக்கியம் ஜுன் 1996 இதழ் DTP அச்சுக் கோப்பும் Offset அச்சும் முதுகுப் பின்னடித்தலும் இதழின் அமைப்புக்குச் சிறப்பு செய்துள்ளன.

✉ சில பக்கங்கள் அதிகமாக இடைவெளியிட்டு அச்சிட்டிருப்பது (Lead Out செய்து) ஏன் என்று தெரியவில்லை.

- பூவண்ணன், கோவை 641 011.

✉ இலவச நூலகம் நடத்துகிறோம். நூலகம் இலக்கியம் அனுப்பி ஆதரவு தரவும்.

T. சந்தான கிருஷ்ணன் பி.ஏ.,
தஞ்சாவூர் 613 001.

✉ தமிழ்ப்பத்திரிகைகள் வாசகர் வட்டம், தங்கள் இலவசமாக அனுப்பிய 4,5,6 / 1996 இதழ்களை சுற்றுக்கு விட்டு வருகின்றோம். நல்ல வரவேற்பை பெற்று வருகின்றது.

✉ பலரிடம் கொண்டு சென்று அறிமுகப்படுத்த வேண்டிய இதழ்.

- இரவீந்திரன், மதுரை 625 020.

✉ நூலகம் இலக்கியம் பார்த்தேன். அரும்பணிதான். தொண்டு சிறக்கட்டும்.

- கடலார், ராயபுரம்
சென்னை 600 013.

✉ 'நூலக இலக்கியம்'' தொகுப்பாக வெளி வருவது கண்டு மகிழ்ச்சி.

✉ அருங்கலைக்கோன் அ. திருமலை முத்துசாமியின் 'ஐம்பது பொன் மொழிகள்' அனுப்புகிறேன். வெளியிடுங்கள்.

- மு. சிவகுமார், நெடுவயல் - 1.
தென் காசி தாலுகா.

நந்தமிழ்க் காவலர்
நூலக ஞாநி
செந்தமிழ்ப் பெருமாள்
சீர்மிகு தொண்டால்,
எந்தைத் தமிழும்
ஏற்றம் பெற்றிட
சிந்தனைக் கவிஞன்
தந்தேன் வாழ்த்து!

புலவர். தமிழறிவன்,இடிமுரசார்,
12/2, ரிபேரோ தெரு, சென்னை.

தமிழ்ப்பூக்காடு!

''நூலக(ம்) இலக்கியம் கவர்ந்ததே என்னை - அது
நுண்ணறிவுக் கருத்துக்கள் விளைந்திடும் பண்ணை;
நூலியல் - வாழ்வியல் சுவைதரும் ஏடு - நம்
நெஞ்சத்தைக் கவர்ந்திடும் தமிழ்ப் பூக்காடு!

- 'இலக்கியமாமணி' பாவலர் இடிமுரசார்,
'கவிதைக்குடில்' சென்னை - 14.

செந்தமிழைத் தேர்ந்தொழுகும் இலக்கிய மாக,
செழும்புலமை நூலகஞானி பெருமாள் ஆற்றும்
விந்தைமிகும் தமிழ்ப்பணியின் மேன்மை ஓங்க...
விவேகமிகு தமிழப்பாவ(ா)ல் வருத்து கின்றேன்!

- புலவர் தமிழறிவன், சென்னை - 14.

கலங்கரை விளக்கம்



இரா. தியாகசுவாமி

மார்த்தாண்டம்

குமரி,

கல்வி நிலையங்கள் நிறைந்த,
பட்டம் பெற்றோர் மிகுந்த,
கல்வி வளர்ந்த மாவட்டம்!

ஆனால் இங்கு,

தேவையான அளவுக்கு
நூலகமும் இல்லை!

நூற்களைப் படிக்கும்
ஆர்வமும் இல்லை!

ஆர்வத்தைத் தூண்டும்
இயக்கமும் இல்லை!

புத்தகம்,

புத்தறவைப் புகட்டும்
புத்துணர்வை ஊட்டும்
புத்துலகைக் காட்டும்

கடமையை உணர்த்தும்
பெருமையை உயர்த்தும்
திறமையை வளர்க்கும்

ஆகவே,

என்றும் படிக்க வேண்டும்
ஏல்லோரும் படிக்க வேண்டும்
நன்றாகப் படிக்க வேண்டும்

நூலகம்!

புத்தகங்களைப் பொன்னைப் போல் பேணிக்காக்கும் காப்பகம்

கருத்துச் செல்வங்களாக குவித்து வைத்திருக்கும் கருவூலம்

படிப்பை நினைவுப் படுத்திக் கொண் டிருக்கும் நினைவகம்

அறிவை வளர்க்கும் அறிவகம்
ஆய்வை வளர்க்கும் ஆய்வகம்

நூலக அருட்பணி இயக்கம்

குமரியின் நூலக வரலாற்றில் சிறப்பான ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கியது.

குறுகிய காலத்தில் அதிக நூலகங் களை நிறுவிப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டியது.

படிப்போரையும் படைப்போரை யும் உருவாக்க முழுமூச்சுடன் முனைந் தது

நூலக அருட்பணி, ஓர் அறப் பணி, அறிவுப்பணி, ஆக்கப்பணி, பொதுப்பணி, நன்மைகள், பயக்கும், நூலக இயக்கம்

- கலங்கரை விளக்கம்

நன்றி : செய்தி மலர் செய்தி 2;
மலர் 2. 15.4.1996.

சென்னைப் பொது நூலகச் சட்டம், 1948

அமரர் நூலகப் பேராசிரியர் அ. திருமலை முத்துசாமி.

(அ) நூல்களையும், பிற நூலகச் சாதனங்களையும் அந்த வட்டார மக்கள் இலவசமாகப் படிக்கவும் பயன்படுத்தவும் அது திறந்திருக்க வேண்டும். நன்னடத்தை, சுகாதாரம், நூலக விதிகள் ஆகியவை தொடர்பான விதிமுறைகளுக்குப் புறம்பாக நடப்பது பற்றிய கட்டுப்பாடுகளையும் இந்நூலகம் பொது மக்களுக்கு விதித்தல் கூடாது.

(ஆ) ஒரு நூலகம் வாரத்தில் குறைந்தது 30 மணி நேரமாவது பொது மக்களுக்குத் திறந்திருக்க வேண்டும்: நாள்தோறும் சராசரியாகப் படிப்போரின் எண்ணிக்கை இயக்குநரால் நிர்ணயிக்கப்படும் குறைந்த அளவுக்கு இருக்க வேண்டும்: எல்லாச் சமுதாயத்தினரும் எளிதில் சென்று படிக்கும் இடத்தில் நூலகம் அமைந்திருக்க வேண்டும்; எந்த ஒரு சமுதாயத்தினரும் எளிதில் செல்ல இயலாத இடத்திற்கு இயக்குநரின் முன் அனுமதியின்றி நூலகத்தை மாற்றுதல் கூடாது.

(இ) நூலகத்தில் நாளிதழ்களும், பருவ இதழ்களும் மட்டுமின்றி நூல்களும் இருத்தல் வேண்டும்.

(ஈ) மாவட்ட நூலக ஆணைக் குழுவின் முன் ஒப்புதல் பெற்ற பிறகே நூல்கள், பருவ இதழ்கள் முதலியவற்றை வாங்க வேண்டும். இந்த நூல்களும், பருவ இதழ்களும் கீழ்க் கண்ட தேவைகளை நிறைவு செய்வதாக இருத்தல் வேண்டும்:-

1. இவை பொதுவான சுவையினையுடையதாகவும், பண்பாட்டு அம்சம் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
2. கதை அல்லது நாவல் நூல்களை வாங்கும்போது அவை தரமான எழுத்தாளர்களால் எழுதப்பட்டதாகவும், கீழ்த்தர மான சுவையைக் கொண்டதாக இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.
3. சமூகங்களையோ சமயங்களையோ அவதூறு செய்யும் நூல்களையும், பருவ இதழ்களையும் வாங்குதல் கூடாது.
4. கீழ்த்தரமான உணர்ச்சியைத் தூண்டுகின்ற அல்லது ஆபாசமான படங்களைக் கொண்ட நூல்களையும், பருவ இதழ்களையும் வாங்குதல் கூடாது.

(உ) ஒவ்வொரு நூலகத்திலும் நூல்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தனித்தனிப் பதிவேடுகள் இருத்தல் வேண்டும்.

(ஊ) இயக்குநரின் ஒப்புதல் பெற்ற நிபந்தனைகளுக்கிணங்க நூல்களை நூலகத்திலிருந்து எடுத்துச் சென்று படிக்கக் கடனாகக் கொடுக்க வேண்டும். இப்படி வழங்கப்படும் நூல்களின் எண்ணிக்கையானது

இயக்குநர் நிர்ணயித்துள்ள குறைந்த அளவுக்குக் குறைவாக இருக்கக் கூடாது.

(எ) இயக்குநர் நிர்ணயித்துள்ள தரத்திற்கிணங்க நூலகத்தின் செயல் முறைகளை நிர்வகிப்பதற்குப் போதிய அளவு அலுவலர்கள் இருக்க வேண்டும்.

(ஏ) நூலகம் சொந்தக் கட்டிடத்தில் தேவையான தளவாடங்களுடன் அமைந்திருக்க வேண்டும். இக் கட்டிடத்தின் வசதிகள் இயக்குநருக்கு மன நிறைவளிப்பதாக இருத்தல் வேண்டும்.

(ஐ) 5000க்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட ஒரு கிராமத்தில் அல்லது நகரப் பகுதியில் கிராமச் சங்கம் அல்லது தனியாரால் ஒரு நூலகம் நடத்தப் படுமானால் அதற்கு ரூ.2000 மூலதன நிதியும், இம் மூலதன நிதியிலிருந்தும் வேறு நிதியாதாரங்களிலிருந்தும் (அரசினர் மானியம் நீங்கலாக) ஆண்டுதோறும் கிடைக்கும் வருமானம் குறைந்தது ரூ.200ம் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:

(1) ஊராட்சி அல்லது கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் நூலகம் இவ்விதியின் கீழ்வராது.

(2) ரூ.2000 மூலதன நிதியும், குறைந்த அளவு ரூ.200 ஆண்டு வருமானமும் இல்லாமல் இப்போதிருந்து வரும் நூலகத்திற்கு இந்நிதியையும், வருவாயையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு 1953 ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் ஐந்தாண்டுகள் வரை கால அவகாசம் கொடுக்கப்படும். ஆனால், இந்நூலகமானது சென்னை மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது மாவட்டக் கழகம் அல்லது ஊராட்சி அல்லது கூட்டுறவுச் சங்கம் இவற்றால் நடத்தப்படுவதாக இருத்தல் கூடாது. இயக்குநரின் அங்கீகாரம் பெற்ற ஓர் அமைப்புக்கு அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒரு நபருக்கு நூலகம் சொந்தமானதாகவும் நடத்தப்படுவதாகவும் இருக்க வேண்டும். நூலகத்தின் அமைப்பும், விதி முறைகளும் இயக்குநருக்கு அல்லது அவருடைய அதிகாரம் பெற்றவருக்கு அனுப்பப்பட வேண்டும்.

19. உதவி பெறும் நூலகங்களின் பட்டியலில் ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு நூலகம் இடம் பெறுவதற்கு கீழ்க் கண்ட நிபந்தனைகளை அது நிறைவு செய்தல் வேண்டும்.

(அ) பட்டியலில் இடம் பெற்ற நாளிலிருந்ததைவிட நூலகத்தின் தரமோ, நிலைமைகளோ குறையக் கூடாது.

(ஆ) நூலகம் தரமாகவும் தகுதிக்குரிய சீரோடும் நடைபெறுகிறதா என்பதை அறிந்து கொள்வதற்காக, நூலகத்தை அவ்வப்போது இயக்குநர் ஆய்வு செய்ய அனுமதித்தல் வேண்டும்.

(இ) நூலகத்தின் கணக்குகளையும் அறிக்கைகளையும், இயக்குநர் கேட்கும் பொழுது அளித்து வரவேண்டும்.

(ஈ) நூலகக் கட்டிடத்தையும், மற்ற அசையாச் சொத்துக்களையும், அதன் மூலதன நிதியையும் இயக்குநரின் அல்லது அவருடைய அதிகாரம் பெற்றவரின் முன் அனுமதியின்றி வேறு காரியங்களுக்கு மாற்றக் கூடாது. அப்படி மாற்ற வேண்டுமானால் அந்த அளவுக்குச் சமமான அளவுத் தொகை அல்லது சொத்து ஈடு செய்யப்படல் வேண்டும்.

(உ) நூலகத்தின் அமைப்பு, விதி முறைகள் இவற்றில் எந்த மாற்றங்கள் செய்தாலும் இயக்குநரின் ஒப்புதல் பெற்ற பின்னரே செய்தல் வேண்டும். அந்த மாற்றங்களின் நகல்கள் இயக்குநருக்கு அனுப்பப் பெறல் வேண்டும்.

(ஊ) நூலக நிர்வாகக் குழு உறுப்பினர்களில் ஏதேனும் மாற்றம் செய்யப் பட்டிருந்தால் அதனை ஒரு மாதத்திற்குள் இயக்குநருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(எ) ஒவ்வொரு ஆண்டும் நூலகத்தின் ஆண்டுக் கணக்குகளைத் தணிக்கை செய்து, தணிக்கையாளரின் சான்றிதழுடன் இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். ஆனால் ரூ.2000க்குக் குறைவாக அரசினர் உதவித் தொகை பெறும் நூலகங்களும், பள்ளி உதவி ஆய்வுநரால் (Deputy Inspector of schools) கணக்குகள் பரிசோதிக்கப்படுகின்ற நூலகங்களும் கணக்குகளை இயக்குநருக்கு அனுப்பத் தேவையில்லை.

20. நூலகங்களுக்கு கீழ்க் கண்ட முறையில் இயக்குநர் உதவித் தொகை வழங்குவார்:

(அ) கட்டிடங்கள், தளவாடங்கள் இவற்றின் மூலதன செலவுகளுக்கான தொகை அல்லது,

(ஆ) பின்வரும் இனங்களுக்கான நடைமுறைச் செலவுகளுக்குரிய தொகை:-

(1) நூல்களும், மற்றும் படிப்பதற்குப் பயன்படும் பிற சாதனங்களும் வாங்குதல்.

(தொடரும்)

Edited Printed and Published by NOLAGAGNANI Dr. Pa. PERUMAL M.A.,M.Lib.sc., Ph.D., From 6, Mu.Va. Street, Arumbakkam, Madras - 600 106. Ph: 4845034. Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printers, 14, yadal Street, Aminjikarai, Madras - 600 029. Laser by Galaxy Computer System. Ph: 483 2571.

Please send Annual Subscription Rs. 120

ஐயோ பாவம், நூலகம்

- கடலார், சென்னை - 13.

ஒ அடுத்தவர்களின் அனுபவங்களை அணுஅணுவாக படித்து ரசிக்கும் அமைதிச் சோலை.

ஒ உலகத்து விஷயங்களை நிலையத்துக்குள் பார்க்கும் நிலைக் கண்ணாடி.

ஒ அனைவருக்குமே நேயம் வழங்கும் ஆர்ப்பாட்டமில்லா ஞானச் சுரங்கம்.

ஒ அறிவை மூளையில் அறுவை சிகிச்சையின்றி அவனாகவே புகுத்திக் கொள்ளும் மருத்துவமனை.

ஒ சாதனைகளைப் படைக்க மேதைகளை பிரசவிக்கும் தாயின் கற்பக் கூடம்.

ஒ ஆனால், சில இடங்களில் பரிதாபமாக உள்ளதே மருத்துவரேயில்லா மருத்துவமனை போல.

ஒ திருப்பதி தர்ம தரிசனத்தோடு சாப்பாடு போட்டாலும் பக்தியுள்ள அத்தனை பேருமா பயன்படுத்துகிறார்கள் ?

ஒ வயிற்றைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதால் தலையைப் பட்டினி போட்டு விடுகிறான் - தமிழன்.

ஒ நிலத்தை வளமாக்க நினைக்கும் மனிதன் தலையை வளமாக்கத் தவறி விடுகிறான்.

> **கருத்தின்றிப் படிப்பது சோம்பலுடையவரின் பொழுது போக்கில் ஒன்றாகும். இதனால் கற்க வேண்டும் என்ற கருத்தின்றி, படித்தால் போதும் என்ற எண்ணமுடன் எழுதுவோர் பலர்.**
>
> **- ஜான்ஸன்.**

ஒ இன்றுள்ள இரும்பு மனிதர்கள் இதயங்கள் இழந்ததற்கு மூலக் காரணமே மூலையிலிருக்கும் நூலகம் தான்.

ஒ உழைக்க இருக்கும் உணர மறுக்கும் உள்ளங்களை உண்மையாக ஒழுங்குபடுத்தவில்லை.

ஒ கோயில் இடிப்பதற்குப் பயன் படுத்தும் உணர்வைப் படிப்பதற்குப் பயன்படுத்தவில்லை. **அதனால்,**

ஒ இரசிக்கக் கூடிய மலரை கசக்கத் தான் தெரிகிறது.

ஒ ஒருவன் செய்தித்தாளைப் படித்ததுமே அறிவுஞானம் வந்து விட்டதாக அங்கலாய்த்துக் கொள்கிறான். மற்றொருவரோ - திரும்பிப் பார்த்தாலே தீட்டாகக் கருதுகிறான்.

ஒ சில நூலகங்கள் - பலதரப்பட்ட

உணவு வகைகள் பாங்காக இருந்தாலும் பரிமாறுவதற்கு ஆளில்லா விருந்துக் கூடம்.

- அடிமை நாடுகளுக்குச் சுதந்திரம் கிடைத்தாலும் அலமாரி நூல்களுக்குச் சுதந்திரமேயில்லை.

- கல்யாணத்திற்கு ஏங்கும் கன்னிப் பெண்கள் மாதிரி அலமாரி நூல்கள், மாப்பிள்ளை வாசகர்களுக்காக ஏங்குகின்றன. - சில நேரத்தில்

- உரிய முறையில் மணமுடிக்காததால் கன்னிப் பெண்கள் காணாமல் போய் விடுகிறார்கள்.

- வாரத்திற்கோர் முறை விடுமுறை நாட்களில் சம்பள சாதியினர் நூலகத்தில் வம்பளப்பதுண்டு.

- கை எழுத்திட தெரியவில்லையென்றாலும் கைவீசி பட்டதாரி போல் நுழையும் பாமர வாசகர்கள் வேறு. மேசையெல்லாம் ஆசையாகவா சப்தமிடும்?

- "அமைதியாகயிரு" என்று சொல்வதற்கும் அஞ்சுவார் தனியே ஒருவராய் தவமிருக்கும் நூலகர்.

- பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன், அதிகாரிகளுக்கும் எடுபிடி.

- இதனால் சில நூலகமும் சோகக் கீதம் பாடுகிறது. இல்லை. இல்லை பாட வைக்கப்படுகிறது.

- குழந்தை உண்ணவில்லையென்றால் - பெற்றோரின் கவனமின்மை.

- குடியர்கள் பெருகுகின்றனர் - என்றால் ஆட்சியர்கள் போக்கு மறந்த அறியாமை.

- மாநகராட்சி உடல் நலம் பேண அத்தனை ஊழியர்களுடன் மருத்துவமனை இயங்குகிறது. நூலகங்களுக்கு?

- உடல் நலம் பேண மருத்துவமனைக்கு அளிக்கும் முக்கியத்துவம் மனநலம் பேண நூலகங்களுக்கு அளிப்பதில்லையே!

- மருத்துவமனையிலே மருந்தாளுநர் மட்டுமே போதுமா?

- உண்மையான நூலகம். ஒருவராலே .... முடியுமா?

- நெல்லுக்கு காலாண்டு, வாழைக்கு ஓராண்டு

- நல் தென்னைக்குச் சில ஆண்டு, நூலகப் பயன் கிடைக்க காத்திருக்க வேண்டும் பல்லாண்டு. அதனால், அரசுகூட அலட்சியம் செய்கிறது போலும்!

- எனவே, எல்லோரும் கூறும் கருத்தை கடமைக்குக் கூறி விட்டுப் போகிறேன் - கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் நூலகமில்லா ஊரில் கால் வைக்க வேண்டாம்.

கடலார்

பாடிப் பழகு

பேராசிரியர் தங்க. சிகாமணி
57, சானகிராம் காலனி
அரும்பாக்கம், சென்னை 106.

1. ஆற்று மணலில் எழுதலாம்
ஊற்று நீரில் பழகலாம்
காற்று வெளியில் முயலலாம்
கரத்தின் உள்ளே எழுதலாம்.

2. பாறைக் கற்களில் வெட்டலாம்
பனை ஓலைகளில் தீட்டலாம்
செப்பு ஓடுகளில் வெட்டலாம்
செப்பு மொழிகளைக் கூட்டலாம்.

3. காட்டு மரத்தில் செதுக்கலாம்
கரும் பலகையில் வரையலாம்
கற்பனை செய்து எழுதலாம்
கண்களை மூடிப் பார்க்கலாம்.

4. கண்ணாடியிலும் வரையலாம்
காகி தத்திலும் எழுதலாம்
கணிப்பான் களிலும் பதிக்கலாம்
காலப் போக்கில் மாறலாம்

5. அதிலும் இதிலும் எழுதணும்
அதையும் இதையும் எழுதணும்
அழகு, அழகாய் எழுதணும்
மழலைக் குழந்தையு ம படிக்கணும்

6. கோர மான எழுத்திற்கு
கோடி முறைகள் வருந்தினேன்
என்னைக் கண்டு திருந்தணும்
எவரும் அழகாய் எழுதணும்

7. காந்திக் கருத்தைக் கற்கணும்
கருத்தில் என்றும் நிற்கணும்
கையெழுத் திலதை ஏற்றணும்
காலம் அதனைப் போற்றணும்

8. குண்டு குண்டாய் எழுதணும்
குறைகள் இன்றி எழுதணும்
ஆன்றோர் கண்டு நெகிழணும்
சான்று அளித்து மகிழணும்

With Best Compliments from **Phone No : 2344667**

Precision Forgings,
104, Poomagal Street,
Ekkattuthangal,
Madras - 600 097.

Manufacturers Of,

Ferrous & Non Ferrous Forgings for Automobile & Electrical Industries.

அன்பு வேண்டுகோள்

1996 - 97 சந்தாவை புதுப்பிக்கவும்

ஆகஸ்டு, 1996 முடிய ஓராண்டு சந்தா முடிவுற்றது. செப்டம்பர் 1996 இதழ் முதல் தொடர்ந்து நூலகம் இலக்கியம் வீடு தேடி வர, புதிய சந்தாவை புதுப்பிக்கவும். M.O. மூலம் ரூ.120/- அனுப்பி ஆதரவை தொடர்ந்து நல்கி உதவவும்.

நூலகம் இலக்கியம்,
6, மு.வ. தெரு, சென்னை - 106.

- நூலகத் துறையில் யார்? எவர்?
- புத்தகாலயங்கள் எங்கு? எப்படி?
- இரண்டு தனித்தனி கையேடுகளை நூலகம் இலக்கியம் உருவாக்க விரும்புகிறது.
- 1997 ஜனவரியில் வெளியிட திட்டம்.
- கருப்பு வெள்ளை புகைப் படங்களுடன் விவரங்கள், பெயர், படிப்பு, விலாசம் அனுபவம்.... எழுதி அனுப்புங்கள்.
- ஒற்றுமையே வலிமை.
- உலக நூலகர்களே ஒன்று படுங்கள்.
- ஒரே குரலில் பேசுவோம்.
- நூலகம் இலக்கியம் ஒரு நூலக இயக்கம் என்பதை உணர்ந்து செயல்படுவீர்!

MULISA 1996

சென்னைப் பல்கலைக்கழக நூலக தகவல் அறிவியல் பழைய மாணவர்கள் சங்கம்.

''கனிந்த வாழ்வு'' நூலக சமுதாயமே, நூலக சமுதாயமே வாருங்கள். மனம்விட்டு பேசுவோம். தமிழ்நாட்டில் - நூலக இயக்கம் சிறப்பாக பணிபுரிய தக்க நடவடிக்கைகளை மேற்கொள் வோம்.

எல்லா மாதமும்

நாள் : - 7-1996. கிழமை: ஞாயிறுகள்

நேரம் : தங்கள் வசதிக்கேற்ப ..... 24 மணி நேரமும். எந்த நேரமும்.

குழுவாக : மாலை : 4-5 : 1 மணி நேரம மட்டுமே கூட்டு உரையாடல்.

இடம் : 6, மு.வ. தெரு, அரும்பாக்கம், சென்னை - 106. தொலைபேசி : 484 5034.

தினமும் காலை 9 மணி வரையிலும் மாலை 6 மணியிலிருந்து தொலைபேசி மூலமும் ஆலோசனை வழங்கலாம். கடிதங்கள் வரையலாம்.

டாக்டர் பா. பெருமாள்,
தலைவர்.
MULISA

> ***கல்வி என்பது ஆற்றில் எதிர்நீச்சல் போடுதல் போன்றது. முன்னேறிக் கொண்டே போக வேண்டும். நிறுத்தினால் பின்னுக்கு அடித்துத் தள்ளும்.***
>
> *- சீனர்*

கண்ணன் கருணை .... வேண்டும்!

- கந்தன் கருணை தெரியும். கண்ணன் கருணை ..... உள்ளமும் தெரியும்.
- தொலைதூரக் கல்வி, அஞ்சல் வழி கல்வி பயிலும் ஆயிரக் கணக்கான தமிழ் நூலகக் கல்வி பயிலும் மாணவர்கள் விண்ணப்பம்.
- நூலக இலக்கிய நூலகத்தை முழுமையாக காணாமலேயே CLISC, BLISC, MLISC பட்டம் பெற, தேர்வு எழுத உள்ளோம்.
- எங்க பயிற்சிக்கு போதிய வசதிகள் இல்லாத நிலையில்.
- தமிழகமெங்கும் பரவி, பணியாற்றும் நூலகங்களில் -
- நூலக இலக்கிய நூல்கள் தொகுப்பை (Collection) 1996 லேயே வாங்கி வைத்து உதவ வேண்டும்.
- CC,DDC, CCC, AACR II, Sears List UDC, ரங்கநாதன் இலக்கியங்கள் - தேர்ந்தெடுத்து வாங்கி வைத்து, எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டுகிறோம். நோட்ஸ் போன்ற புத்தக வழிகாட்டிகள் (Practical)க்கு பயன்படுபவை.
- நூலகப் பணியில் வாசகர் சேவையே புனிதமானது.
- வாசகர் திருப்தியில் (புன்னகையில்) ரங்கநாதனை (இறைவனை) காணுவோம்.
- வாசகர் சேவை மேம்பாட்டுக்கு உங்கள் ஆலோசனைகளை எழுதி அனுப்புங்கள்.
- பிரச்னை மட்டுமல்லாமல், பரிகாரத்தையும் நீங்களே சொன்னால்தான், தகுந்த மன ஒட்டத்தை காணமுடியும்.
- 'நூலகம் இலக்கியம்' வாசகர் பணியில் நூலக இயக்கமாகும்

கருகலைப்பு - நூலகர் சிந்தனை

சக்கரத்தாழ்வார்.

- கருகலைப்பை சட்டப்படி சமுதாயம் ஏற்றுக்கொண்டு விட்டது.
- கன்னிமாரா நூலகப்பணி மேம்பாட்டுக்கு, தமிழக அரசு நால்வர் குழுவை, இரண்டாண்டுக்கு பணியாற்ற, டிசம்பர் 1995ல் நியமித்தது.
- குழு கூடக் கூடவில்லை. கர்ப்பம் எப்படியோ வந்து விட்டதே! கன்னித்தாய் சினிமா தெரியும். கன்னி ... தாயானால் சமுதாயம் .... சிரிக்கும்!
- கன்னி மாறா நூலகத் தலைவர் .... இந்தக் குழுவைக் கூட்டி சில தீர்மானங்களை அரசுக்கு அனுப்பிவிட்டு, கமிட்டியை கலைத்து விடலாம். இதைவிட சூப்பர் கமிட்டி போட்டு விடலாம் என்று யோசிக்கிறார். தொலைபேசி உரையாடலில் கருத்தென்ன என்கிறார்.
- குழந்தை பிறக்கட்டும். அதன் தலைவிதிப்படி விட்டுவிடலாம் எனலாமா ?
- கர்ப்பச் சிதைவை ஆதரிப்போமா!
- வாசகர் எண்ணங்களை எழுதுங்கள்!!!

"காதல்" அரு. ராமநாதன்

சி. மோகன்

படைப்பாளியாக, பதிப்பாளராக, பத்திரிகை ஆசிரியராக தமிழ்ச் சுழலில் தன் அடையாளங்களைப் பதித்திருப்பவர் அரு. ராமனாதன். சரித்திர அறிவு, சரித்திரத்தைப் பரிசீலிப்பதில் புதிய பார்வை, சிந்தனை மரபுகள் மீதான நாட்டம், படைப்பூக்கம்; எழுத்து, நூல் வெளியீடு, பத்திரிகை என தான் செயல்பட்ட தளங்களில் வியாபார ரீதியான செயல் திட்டங்கள் ஒருபுறம், தன் காலத்துக்கான தேவையை நிறைவேற்றும் அர்த்தமுள்ள முயற்சிகள் மறுபுறம் என்ற இசைவான போக்கு. இவற்றின் ஒத்திசைவான ஆளுமையே அரு. ராமனாதன்.

1924-ம் ஆண்டு ஜூலை 7-ம் தேதி, ராமநாதபுரம் மாவட்டம் கண்டனூரில் பிறந்த இவர் பச்சையப்பன் கல்லூரியில் சரித்திர பாடத்தில் இண்டர்மீடியட் முடித்தார். வரலாறு, இவருடைய ஆளுமையின் முனைப்பான அம்சமாகத் தொடர்ந்து நீடித்திருக்கிறது.

1947-ம் ஆண்டு, தன் 23-வது வயதில், காதல் மாத இதழைத் திருச்சியிலிருந்து கொண்டு வந்தார். முதல் இதழ் 47-ம் ஆண்டு நவம்பர் மாதம் வெளி வந்தது. அன்றைய தமிழ்ச் சூழலில் இது ஒரு அசுர காரியம். விபரீத முயற்சி.

காதல் என்ற வார்த்தையையே ஒரு அருவருப்பாகத் தமிழ்ச் சமூக மனம் கற்பித்துக் கொண்டிருந்த காலம். இவ்வளவுக்கும் சற்றும் அருவறுப்பற்ற ரசமான காதல் கதைகளே இவ்விதழில் இடம் பெற்றன. கு.ப.ராவின் புனைவுலகம் சற்றே நெகிழ்ந்து, தளர்ந்து, நீர்த்துப் போயிருந்தால் என்னவாகியிருக்குமோ அத்தகைய கதைகளே இவை. அவருடைய வாழ்நாளின் இறுதிவரை இதழ் தொடர்ந்து வந்தது. தன் 50-வது வயதில் 1974-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ம் தேதி அவர் இறந்தபின்பும் நான்கைந்து ஆண்டுகளுக்கு இதழ் தாக்குப் பிடித்தது.

திருச்சியிலிருந்து இதழைக் கொண்டு வந்த போதிலும் அச்சேற்றத்துக்காக சென்னை வந்து போக வேண்டியிருந்ததால் ஓரிரு ஆண்டுக்குள்ளாகவே சென்னைக் குத் [illegible] குடியிருப்பையும் அலுவல[illegible]யும் மாற்றினார்.

1952-ல் பிரேமா பிரசுரம் என்ற பதிப்பகத்தைத் தொடங்கினார். 50-களிலும் 60-களிலும் வெகுஜன வாசிப்பை வெகுவாக ஈர்த்திருந்த பி.டி.சாமி, மேதாவி, சிரஞ்சீவி, சந்திரமோகன் ஆகியோரின் நூற்றுக்கணக்கான மர்ம நாவல்களை வெளியிட்டார். இவ்வகையில் பதிப்பகம் பொருளாதார ரீதியாக ஸ்திரப்பட வகை செய்த அதேசமயம், சிந்தனையாளர் வரிசை ஒன்றை நேர்த்தியாகப் பதிப்பித்ததில் இவருடைய அருமையும் அக்கறையும் வெளிப்பட்டிருக்கிறது. இவ்வரிசை நூல்கள் அறிமுகம் என்ற வகையில் மிக முக்கியமானவை.

ஒவ்வொரு நூலையும் தேர்ந்தெடுத்த சிந்தனையாளரின் அறிமுகமும் வரலாறும், நூல் சுருக்கங்கள், சிந்தனைத் திரட்டு என 3 பொதுவான பகுதிகள் கொண்டதாகத் திட்டமிட்டு உருவாக்கியிருப்பது ஒரு தேர்ந்த பதிப்பாளராக இவரை அடையாளம் காட்டுகிறது.

சிந்திப்பது என்ற தன்மைதான் உயிர் ராசிகளில் மனிதனை மேலானவனாக ஆக்கியிருக்கிறது. சிந்தனை வளத்தின் அவசியத்தை உணரும் ஒவ்வொரு தமிழ் வாசகரும் இவ்வரிசையில் வெளியான 17 நூல்களையும் வாசிக்க முன்வர வேண்டும். டார்வின், பிளேட்டோ, கார்ல் மார்க்ஸ், ரூஸோ பெஞ்சமின் ஃபிராங்ளின், இங்கர் சால், எமர்ஸன், வால்டேர், மாக்சியவெல்லி, ஃப்ராய்டு, மாண்டெய்ன், கம்பூசியஸ், சா அதி, நீட்ஷே, தொல்காப்பியர், ஐன்ஸ்டைன் ஆகியோர் இவ்வரிசையில் வெளிப் பட்டுள்ளனர். பிளேட்டோ, ஃபிராங்ளின் பற்றிய நூல்கள் அரு. ராமனாதனே எழுதியவை.

இப்பதிப்பகத்தின் மற்றுமொரு குறிப்பிடத்தகுந்த வரிசை பழம்பெருங் கதைகள், கதைக்குள் கதையாக விரிந்து பரவும் தொன்மையான கதைக் களஞ்சியங்கள், ஏராளமான அழகிய கோட்டோவியச் சித்திரங் களுடன் இந்த வரிசையில் வெளி யாகின. இவர் வெளியிட்ட விக்கிர மாதித்தன் கதைகள் மிகவும் பிரசித்தி பெற்றது. என் 12-வது வயதிலிருந்து ஒவ்வொரு விடுமுறையின்போதும் பல வருடங்கள் இப்புத்தகத்தைப் பலமுறை வாசித்திருக்கிறேன். என் வாசிப்புப் பழக்கம் இதிலிருந்து தொடங்கியதுதான்.

அப்போது எங்கள் வீட்டி லிருந்ததே இரண்டே புத்தகங்களில் ஒன்று இது. (மற்றொன்று, ராஜாஜியின் மகாபாரதச் சுருக்கம்) இவ்வரிசையில் இவர் வெளியிட்ட முக்கியமான பிற நூல்கள்: மதன காமராஜன் கதை, கதைக் கடல் என்ற தலைப்பில் மகாகவி சோம தேவ பட்டரின் கதா சரித சாகரம், பாட்டி சொன்ன கதைகள், நான்கு பக்கீர்கள் கதை, நம் நாட்டுப் புராதன நாடோடிக் கதைகளடங்கிய திராவிட நாட்டுக் கதைகள்.

ஒரு படைப்பாளியாக அரு ராமனாதனுக்கு வெகுஜன வரவேற்பு பெற்றுத் தந்தது, ராஜ ராஜ சோழன் நாடகம். இவருடைய அசோகனின் காதலி, அசோகரின் செறிவான வரலாற்றுப் பதிவுகள் கொண்டது. தங்கப் பதுமை, பூலோக ரம்பை, ராஜ ராஜ சோழன் போன்ற திரைப் படங்களுக்குத் திரைக்கதை, வசனம் எழுதியிருக்கிறார். கலைமாமணி விருது அறிவிக்கப்பட்ட முதல் ஆண்டான 1967-லேயே அன்றைய முதலமைச்சர் அண்ணாதுரையால் இவ்விருது அரு. ராமனாதனுக்கு வழங்கப்பட்டது.

இவை ஒருபுறமிருக்க, படைப்பாளியாக அரு. ராமனாதனின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நாவல், வீரபாண்டியன் மனைவி. அரசர் கால - இடைக்கால - சரித்திரத்தைப் பின்புலமாகக் கொண்ட எண்ணற்ற எழுத்துக் குவியல்களுக்கிடையே வலுவான ஒரே படைப்பு என்று நாம் இதைக் கொள்ளலாம். இந்நாவல், வரலாற்றின் மீதான நம் பார்வையில் புதிய வெளிச்சம் பாய்ச்சுகிறது.

கம்பன், கம்ப ராமாயணத்தை இயற்றி அரங்கேற்றும் காலப் பின்புலம்தான் இந்நாவலின் காலம். அதேசமயம் கம்ப ராமாயணக் கதையையே இந்நாவல் கதைப் போக்கிலும், நிகழ்வுத் தளத்திலும் மீண்டும் முன் வைக்கிறது. ஒவ்வொரு அத்தியாயமும் கம்ப ராமாயண வரிகளை முன்வைத்தே ஆரம்ப மாகிறது.

இந்நாவலின் சூத்ரதாரியான ஜனநாதனின் பார்வையில் நாவலின் மூன்று பாகங்களும் முறையே யுத்த காண்டம், சுந்தர காண்டம், பால காண்டம் என்று தலைகீழ் நிலையில் விளக்கம் பெறுகின்றன. 'மனிதனுக்கு அப்பால் மகா மனிதனின் வருகையையும் நன்மை தீமைகளுக்கு அப்பால் வல்லமையையும் பற்றிச் சிந்தித்த' நீட்ஷேயின் பாதிப்பில் உருவாகியிருக்கும் பாத்திரம்தான் வான்நிலை கண்டான் ஜனநாதக் கச்சிராயன்.

இந்நாவல் சரித்திரத்தின் மீதான நம் பார்வையை ஊடறுக்கும் விதம் முக்கியமானது. அது, நம் 'பொய்கால' பாவனைகளைக் கேள்விக் குள்ளாக்குகிறது. சோழப் பேரரசை விஸ்தரிக்க முனையும் குலோத்துங்க சோழனின் பிரயாசைகளையும் மனோபாவங்களையும் எதேச் சதிகாரமாகவும் ஆதிக்கமனோபாவ மாகவும் காண்பது மட்டுமல்ல; அது எப்படி மக்கள் உரிமைகளுக்கும், கலாச்சார வாழ்வுக்கும் குந்தகம் விளைவிக்கிறது என்பதையும் ஜனநாதனின் பார்வையில் நாவல் வலுவாக முன் வைக்கிறது. மேலும் ஜனநாதனின் புத்தி பிறப்பிக்கும் சொல்லாடல்கள் இருபுறமும் கூர் கொண்ட கத்தியின் வீச்சாக நாவல் முழுவதும் விரவி நாவலுக்குப் பன்முகப் பரிமாணங்களை விளை விக்கின்றன.

ஜெயமோகன் தன் 'நாவல்' புத்தகத்தில் கல்கியைக் கோலாகல மாகக் கொண்டாடுவது விநோதமென் றால் இப்படியான ஒரு நாவலைக் கவனிக்காமல் ஒதுக்கியது விபரீதம் வெகுஜனத் தேர்வில் பாரத்தைச் சுமந்து திரிவதால் நிகழ்ந்துவிடும் விபரீத இது.

பாசாங்கு என்பது 20-ம் நூற்றாண்டு தமிழ்ச் சமூக மனத்தைப் பீடித்திருக்கும் ஒரு நோய்க் கிருமி. இதுதான் காதல் இதழை நடத் தியதற்காக அரு. ராமனாதனை ஒதுக்கியது. ஆனால் காலத்தின் தேவையை உணர்ந்தறிந்து செயல் பட்ட அவருடைய பங்களிப்புகளை அவ்வளவு சுலபத்தில் புறக்கணித்து விட முடியாது. இவரைப் போன்ற ஒரு ஆளுமையாளரை காலம் மறக்க முற்படும்போது நாம் நினைவு கூர்ந்து செயல்பட வேண்டியிருக்கிறது. அது நம் பயணத்தின் தொடர்ச்சிக்கு உத்வேகமளிப்பதற்கான அவசிய மாகவும் இருக்கிறது.

நன்றி: புதியபார்வை. ஜூலை 1996.

அரு. ராமனாதன்



பக்கம் 32. 23.6.1996 : நன்றி : தினமணி கதிர்.

நாம் எப்போதும் கற்க, எல்லாவற்றையும் கற்க, நூலகங்கள் அவசியமாகும். நாடெங்கும், வீடெங்கும் நூலகங்கள் தோன்ற வேண்டுமென்ற எண்ணம் வேரூன்றிய போதிலும், தமிழ்நாட்டில் இதுவரை சுமார் 2500 நூலகங்கள்தான் செயல்பட்டு வருகின்றன.

நமது தஞ்சை, நாகை மாவட்டங்களைப் பொறுத்தவரை 106 நூலகங்களும் 68 பகுதி நேர நூலகங்களும் செயல்பட்டு வருவதாக புள்ளி விவரம் தந்துள்ளார்கள். இந்த எண்ணிக்கை வளர நாம் அனைவரும் பாடுபட வேண்டும். எண்ணிக்கை வளர்ந்தால் மட்டும் போதாது. அடிப்படை வசதியும் பெருக வேண்டும்.

இதற்கான குறிக்கோள்களை வகுத்து, பல்வேறு திட்டங்களை தலைவர் கலைஞர் கடந்த காலத்தில் செயல் படுத்தியதை நூலக இயக்கத் தோடு தொடர்புடையவர்கள் அறிவார்கள்.

நான் பொறுப்பேற்றிருக்கின்ற உள்ளாட்சித் துறைக்கும் நூலக இயக்கத்திற்கும் நிரம்ப தொடர்புண்டு. தமிழ்நாட்டில் ஏறத்தாழ 2500 நூலகங்கள் இருந்தபோதிலும் அவற்றில் பெரும்பான்மையானவை நகராட்சி மன்றங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

''இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஒவ்வொரு நூலகத்தையும் சொந்தக் கட்டிடத்தில் செயல்பட வைக்க வேண்டும்'' என்பது நமது முதல்வரின் ஆவலாகும். அந்த முயற்சிக்கு உள்ளாட்சித்துறை துணை நிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலகவரி: நகராட்சிகள், பேரூராட்சிகள் ஊராட்சிகள் மூலம் நூலக வரி வசூலிக்கப்பட்டு மாவட்ட நூலகத் துணைக் குழுவிற்கு வழங்கப்பட்டுவருகிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் நூலக வரியாக செலுத்தும் தொகை ரூ42 இலட்சத்து 36 ஆயிரத்து 523 என்றும், நாகை காயிதே மில்லத் மாவட்டத்தை பொருத்தவரை இந்தத்தொகை 44 இலட்சத்து 16 ஆயிரத்து 456 ரூபாய் என்றும் தெரிவித்துள்ளார்கள். இந்த தொகையை வழங்குவதில் கடந்த காலத்தில் ஏற்பட்ட தேக்க நிலையை நான் அறிவேன்.

நூலக வரியில் உள்ளாட்சி அமைப்புகள் தரவேண்டிய நிலுவைத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் நாள்தோறும் சுமார் நாலரை மணி நேரம் நூல்களை, நாளேடுகளை படிப்பதற்காக செலவழிக்கின்றார்.

நூலகத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்ட நமது முதல்வரின் சீரிய வழிகாட்டுதலில் நூலகத்துறை வளர்ச்சிப் பெற்று தழைத்தோங்கும் என்பதில் ஐயமில்லை

இவ்வாறு அமைச்சர் கோ. சி. மணி பேசினார்.

நன்றி : முரசொலி நாளிதழ். 23-7-1996

NOOLAGAM ILAKKIYAM　　Tamil Monthly　　August,
Regd No. TN / MS (N) / 922　　R.Dis 4441 /

தமிழ் நாட்டில்

நூலக இயக்கம் மக்கள் இயக்கமாக மாற வேண்டும்

அமைச்சர் கோ. சி. மணி திருத்துறைப்பூண்டி பேச்சு

தமிழ் நாட்டில் நூலக இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாக வேண்டுமென்பது, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் அவவ நாள்தோறும் பல மணி நேரம் கடுமையாக உழைக்கும் முதல்வர் நாலரை மணி நேரம் நூல்களை படிப்பதற்காக செலவிடுகிறார் உள்ளாட்சிதுறை அமைச்சர் கோ. சி. மணி கூறியுள்ளார்.

திருத்துறைப்பூண்டியில் பொது நூலகத்துறையின்ரால் கட்டப் கிளை நூலக கட்டிடம் ஒன்றை திறந்து வைத்து அமைச்சர் கோ. சி. பேசியதாவது:-

கல்விச் செல்வம் காலத்தால் அழியாதது : ஒரு நாட்டின் வளர்ச் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு நூலகம் பெரிதும் துணை நிற்கிறது. க செல்வம் என்பது காலத்தால் அழியாதது, அறிவாற்றல் எ ஒருவருக்கு எல்லா பெருமையையும் பெற்றுத் தரக்கூடியது.

அத்தகைய கல்வியை அறிவாற்றலை – நமக்கு வழங்கு கருவூலமாக – பாசறையாக திருத்தலமாக, ஆலயமாக நூலக இருப்பதை நாம் அனைவரும் அறிவோம்.

நூலகங்களைப் பொறுத்தவரை செலவின்றி மக்களுக்கு சி படிப்பை வழங்குகின்ற நிறுவனமாக, அமைப்பாக திகழ்கின்றது.

ஏழை-எளிய மக்களுக்காக ஆட்சி அமைத்து அவர்களின் வாழ்விற்காக பாடுபடும் நமது தலைவர் கலைஞர் அவர்கள் சமுதாய மலர்ச்சிக்கு அடித்தளமாக திகழும் நூலக இலக்கியம் ஆல்போல் தழை வேண்டுமென்பதற்காக ஏற்கனவே பல்வேறு திட்டங்களை செ படுத்தி வந்ததையும் இனி செயல்படுத்த இருப்பதையும் நீங்களெல் தெளிவாக அறிவீர்கள்.

நூலகம் என்பது ஒரு மக்கள் மன்றமாக பரிணமிக்க வேண்டும். நூ இயக்கம் என்பது ஒரு மக்கள் இயக்கமாக மலரவேண்டும் என்பதற் கழக ஆட்சி மேற்கொண்ட முயற்சி நிறைவேற்றிய திட்டங்கள் என் கும் எண்ணிப் போற்றத் தக்கவை என்பதை நினைவூட்ட விரும்புகி

கலைஞர் சொன்ன கருத்து : தலைவர் கலைஞர் ஒருமுறை சொன் "கல்வி என்பது காலச் கட்டுக்கு உட்படுவதல்ல, வாழ்கின்ற வரையில் எல்லைக்கோடு வரையாமல் தேடிப் பெற வேண்டியச் செ அது. பட்டத்தோடு கல்வியின் உச்சியை எட்டிவிட்டோம் என நினை தொடர்ந்து கற்றுவராது போயின் காலத்தால் நாம் பின் தள படுவோம்" என்று குறிப்பிட்டார்கள்.

[தொடர்ச்சி உள் அட்டை